


உ
சிவமயம்
# ஆத்மஜோதி
*தாபிதம்: 1948*

ARTHMA JOTHY
Est. 1948
ISSN 1703-9185

மலர் 5: இதழ் 4
சுபானு வருடம்
தை - பங்குனி
திருவள்ளுவர் ஆண்டு
*2036*

**கௌரவ ஆசிரியர்**
பேரறிஞர்
முருகவே பரமநாதன்
**பிரதம ஆசிரியர்**
திரு. வி. கந்தவனம்

**ஆசிரியர் குழு**
திரு. செ. சோமசுந்தரம்
திரு. ச. திருநடராசா
திரு. சிவ. முத்துலிங்கம்

**எழுத்தமைப்பு**
திரு. மா. கனகசபாபதி
**அச்சுப் பதிப்பு**
விவேகா அச்சகம்

**வெளியீடு**
ஆத்மஜோதி
தியான நிலையம்
பதிவு இல: 1476651

**தொடர்பு முகவரி**
Siva Muthulingam
217 Morningside Ave.
Apt. 912 Toronto, ON.
M1E 3E4
Tel: (416) 724-6240
www.arthmajothy.org

## உள்ளடக்கம்

1. ஆசிரியர் தலையங்கம்
2. எங்குமுள்ள பிள்ளையார்
3 தங்கத் தலைவிக்கு வாழ்த்துக்கள்
4. அன்று ஆறுமுகநாவலர் இன்று அன்னை தங்கம்மா
5. துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்
6. சித்தாந்த ஞானக் களஞ்சியம்: நூல் ஆய்வு
7. Sita's Expostulation to Rama
8. கடிதங்கள்
9. சமயச் செய்திகள்
10. ஐரோப்பாவில் ஆத்மஜோதி ஆசிரியர்
11. ஈழத்துத் திருத்தலங்கள் - 8
12. மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்
13. Arumuga Navalar
14. Catechism on Saivaism
15. சொக்கன் எனும் சொர்க்கம்
16. ஆத்ம ஜோதி சுவாமிகளிடம் கேட்டவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்தி வணங்குகின்றோம்!

தவத்தினில் வந்த சக்தியின் புதல்வியாம்
சிவத்தமிழ்ச் செல்வியின் செம்மன எண்பதை
முத்து விழாவாய் முறையுடன் எங்கணும்
பத்தியிற் சிறந்தோர் பணிந்துகொண் டாடுவர்!
வாழிய துர்க்கா துரந்தரி வாழி!
சூழுநல் லடியார் துயர்கெட வாழி!
சமயத்தை அறிந்த தமிழே வாழி!

அன்புச் சமயம் அடியவர் வாழ்வை
இன்பஞ் செயவே என்பதை யுணர்ந்து
வித்துவச் சாத்திர விளக்கங்கள் விடுத்து
பத்தியால் மக்கள் வாழ்வின் பயனை
நித்தமு மெய்த நிகரிற் பணிகள்
மெத்தவே புரியும் மேலோய் வாழி!

நீரில் மறைவாய் ஊரா முத்தே
நேரில் நிறைவாய் எறிக்கும் நிலவே
கருதிய தளிக்குங் கற்பக தருவே
அருள்மிகு துர்க்கை யன்னையி னுருவே
தங்கம் மாவே தமிழர் தவமே
மங்கையர்க் கரசி யாயினும் மக்கள்
யாவர்க்கும் அரசி சேவித்த தரும
தேவதை தாங்கும் தீங்கொன்று மில்லை!

வாழ்க தாயே வளமுற வென்றே
வாழ்த்தி நின்னை வணங்குகின்றோமே!

- வி. கந்தவனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# எங்குமுள்ள பிள்ளையார்

## மறவர்புலம்
## வள்ளக்குளப் பிள்ளையார்

ஒண்ணுதலிற் கண்ணுடைய உண்மை யாளர்
ஓங்கார மாயொலிக்குந் தொன்மை யாளர்
வண்ணமிலா அசுரனுக்கு வன்மை யாளர்
வானவர்க்கு வாழ்வளித்த மென்மை யாளர்
பண்ணவரும் பணிந்தேத்தும் முதன்மை யாளர்
பலவடிவப் பலநாமப் பன்மை யாளர்
மண்ணதனில் நல்லவள மருதஞ் சூழ்ந்த
மறவர்புலம் வள்ளக்குளப் பிள்ளை யாரே. 3

## குரும்பசிட்டி
## சித்தி விநாயகர்

வேண்டுவதை வேண்டமுன் விளைவிக் கின்றார்
வேண்டாத தருளாதே யழவைக் கின்றார்
தீண்டமுனர் தீவினைகள் விழவைக் கின்றார்
தேனமுதாய்ச் சுவையூட்டித் தொழவைக் கின்றார்
நீண்டதுயில் நீக்கிவிழித் தெழவைக் கின்றார்
நினைவின்றேல் நினைப்பூட்டி நெகிழ்விக் கின்றார்
ஆண்டுகலைக் குரும்பைநகர் அருளு கின்றார்
அவர்சித்தி விநாயகராம் அடைந்துய் வாமே. 4

## புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவைச்
## சித்தி விநாயகர்

மென்னோலைச் சாமரையை விரும்புஞ் சித்தி
விநாயகரே விண்ணூர்போல் விளங்குஞ் செல்வப்
புன்னாலைக் கட்டுவனூர் போற்றும் ஆயாக்
கடவைபோந் துனைக்கண்டு புகழ்ந்து பாடத்
தன்னாலே நாத்தளர மெய்வி திர்க்கத்
தாங்காதே கண்சொரியத் தலையிற் குட்டி
என்னானென் றவைநீக்கி எஞ்சி நிற்கும்
எளியேனை ஏற்றருள வேண்டு வேனே. 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊரெழுப் பிள்ளையார்

உத்தமர்வாழ் ஊரெழுவின் பிள்ளை யாரே
உருகியுளம் ஏத்துகின்றேன் ஏத்து வோரை
நித்தமும்நீ காத்தருளி நீடு நன்மை
நிகழ்வித்து வாழ்வித்து வினைகள் நீக்கிப்
பத்திசெயும் பக்குவத்தைப் பரிந்த ளித்துப்
பரஞானச் சுடரேற்றிப் பற்றெ ரித்துச்
சித்தமெலாந் தெளிவித்துத் தித்திக் கின்ற
சிவத்தோடு சேர்த்திடுவாய் என்ப தாலே! 6

## உரும்பராய் ஓடையம்பதிக் கற்பகப் பிள்ளையார்

ஆங்காரக் கயமுகனை அழித்த கொம்பர்
அகத்தியரின் கமண்டலத்தைக் கவிழ்த்த வம்பர்
ஓங்கார ஒலியோங்க வேதம் ஓங்க
ஒப்பற்ற சைவநெறி உலகில் ஓங்க
ஓங்கூக்க உழைப்பாக்க உரும்ப ராயின்
ஓடையம் பதியுவந் தருளு கின்றார்
காங்கேயர் தமக்குமுனர் உதித்த கற்ப
கப்பிள்ளை யார்கழல்கள் காப்ப தாமே. 7

## உரும்பராய் கருணாகரப் பிள்ளையார்

செல்வாய செல்வர்க்குஞ் செல்வா போற்றி
தேவாதி தேவர்க்குத் தேவா போற்றி
வெல்வீரர் யாவர்க்கும் வீரா போற்றி
விறற்பாவ வினைச்சூரன் வென்றாய் போற்றி
அல்லல்கள் யாவையுமே அறுப்பாய் போற்றி
ஆனைமுக மானபொரு ளாவாய் போற்றி
கல்வியூர் உரும்பராய் காப்பாய் போற்றி
கருணாக ரப்பிள்ளை யாரே போற்றி. 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கத் தலைவிக்கு வாழ்த்து

## கனடா அருள்மிகு வரசித்தி விநாயக ஆலயப் பிரதம குருக்கள்

## சிவத்திரு டாக்டர் பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள்

சிவத்தமிழ்ச் செல்வியின் 80வது வயது நிறைவையொட்டி நடைபெறும் சிவத்தமிழ் விழாவில் நாம் இன்று இணைந்துள்ளோம். இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து வாழும் சைவத்தமிழ் மக்களால் அவரது முத்துவிழாவினை சிவத்தமிழ் விழாவாக தாம் வாழும் நாடுகளில் பெருவிழா எடுத்து வருகின்றனர். அந்த வகையில் இன்று இந்துசமயப் பேரவையின் சார்பில் நடைபெறும் சிவத்தமிழ் விழா சிறப்பாக நடைபெறுகிறது.

அறிஞர்களாற்றான் ஒரு நாடு பெருமை அடைகிறது. சோக்கிரற்றீஸ் தோன்றியதால் கிரேக்க நாடு நினைவில் வருகிறது. ஆபிரகாம் லிங்கனால் அமெரிக்கா பெருமை அடைகிறது. ஆறுமுகநாவலரால் யாழ்ப்பாணம் பெருமை அடைகிறது. சிவத்தமிழ் செல்வியினால் சைவப் பேருலகே பெருமை கொள்கிறது. காரணம் நாவலர் பெருமான் எவ்வளவு சிரமங்களுக்கு மத்தியில் சைவத்தையும் தமிழையும் வளர்க்க அரும்பாடு பட்டாரோ அதைவிட மிகுந்த போர்ச்சூழலிலும் மக்கள் சேவையே மகேசன் சேவை என அன்பே சிவம் என்ற தத்துவத்தினை ஆதாரமாக கொண்டு சிவத்தமிழ்ப் பணியினை ஆற்றியிருக்கிறார் சிவத்தமிழ்ச் செல்வி அவர்கள். அவர் வாழும் காலத்தில் நாம் வாழ்கிறோம் என்பதே எமக்குப் பெருமையைத் தேடித்தருகிறது.

தமிழையும் சைவத்தையும் இரு கண்களாகப் போற்றிவரும் சிவத்தமிழ்ச்செல்வி அவர்களின் சேவையும் பணியும் அப்பழுக்கற்றவை. தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்து சமயப்பணியூடாக ஆற்றிவரும் சமூகப்பணியினையே நாம் உற்று நோக்க வேண்டும். ஒரு தாயாக, சகோதரியாக, நண்பியாக, ஓர் ஆசிரியையாக அனைத்து விதத்திலும் செயல்திறனோடு எம்மக்களுக்கு ஆற்றிவரும்பணி சொல்லில் அடங்காது. பேராசிரியர் சு. வித்தியானந்தன் குறிப்பிட்டதுபோல் பயிற்சி பெற்ற ஆசிரியராகவும், பண்டிதராகவும், சைவப்புலவராகவும் இவரது தகமைகள் தமிழ்ப்பணிக்கும் சைவப்பணிக்கும், சமூகப்பணிக்கும் உறுதுணையாக இருந்து வருகின்றன. தமிழ் ஈழப்பிரதேசத்தில் இவரது சமயப்பிரசங்கங்கள் நடைபெறாத ஆலயங்களே இராது என்பதோடு, இந்தியா, மலேசியா சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும் தன் சமய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரையின் மூலம் பல மக்களையும் சீர்ப்படுத்தியுள்ளார்.

புலம் பெயர்ந்த நாடுகளில் தமிழ் மக்கள் வாழத் தொடங்கிய பின் ஒவ்வொரு நாட்டு சமயப்பற்றாளர்களும் அவரை அங்கு அழைத்தபோதும் தன் மண்ணில் தன்பணி நிறைய தேவை என எண்ணியதால் தன் சார்பில் செஞ்சொல் செல்வர் திரு ஆறுதிருமுருகன் அவர்களை அனுப்பி சைவத்தமிழ் பணியினை ஆற்றி வருகிறார். இவரும் தாய்வழியில் தனயனைப்போல் தமிழுக்கும் சைவசமயத்துக்கும் சமூகத்துக்கும் தன்பணியினை சிறப்பாக ஆற்றி வருகிறார் என்பதையும் குறிப்பிட்டேயாக வேண்டும்.

ஏழாவது நூற்றாண்டில் மங்கையர்க்கரசியாரை "தெய்வப்பாவை" என சேக்கிழார் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். இன்று அதே சேக்கிழார் பெருமான் இருப்பாரானால் எங்கள் சிவத்தமிழ்ச்செல்வியும் தெய்வப்பாவை சிவத்தமிழ்ச் செல்வி என சேக்கிழார் பெருமானால் பாடிப் புகழ் பெற்றிருப்பார்.

இத்தகைய சிறப்புகள் உடைய சிவத்தமிழ்ச் செல்வி அவர்கள் நூறாண்டுக்கும் மேலாக சரீர திடகாத்திர ஆரோக்கியத்துடன் சிவப்பணிபுரிய எல்லாம் வல்ல ஸ்ரீவரசித்தி விநாயகனின் பாதங்களில் பணிந்து பிரார்த்தித்து அமைகிறேன்.

வணக்கம்.

ஸ்காபரோ நகரில் உங்கள் சகலவிதமான தேவைகளுக்கும் அறுசுவை உணவு வழங்குபவர்கள்

**நியூ தேவி உணவகம்**

**இலங்கை, இந்திய உணவு வகைகளிற் கை தேர்ந்த நிபுணர்கள்**

தினமும் இடியப்பம் (வெள்ளை, சிவப்பு), பிட்டு, இட்லி, தோசை, வடை, வாய்ப்பன், மோதகம், பற்றிஸ் மற்றும் பல்வேறு உணவுகளை காலை 9:00 மணி முதல் நள்ளிரவு 12 மணி வரை சுடச்சுட பெற்றுக்கொள்ளலாம்

விரத நாட்களில் விசேட மரக்கறிகளுடன் வடை பாயாசமும் பரிமாறப்படும்

1877 Lawrence Ave. East, Scarborough, ON
(Lawrence & Pharmacy)

**Tel: 416-288-0303**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ சித்தாந்த மன்றத்தின் வாழ்த்து

“என் கடன் பணி செய்து கிடப்பதே” என்ற அப்பர் அடிகள் வாக்கிற்கேற்ப தொண்டின் திருவுருவமாக விளங்கும் அன்னை கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் எண்பது ஆண்டு அகவை நிறைவை அடைகிறார். அவர்களின் பணிகளைப் போற்றி, வெளிவரும் “ஆத்மஜோதி” சிறப்பு மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன். அன்னை அவர்களுக்கு “தங்கம்மா நான்மணி மாலை” பாடிய கலாநிதி கவிஞர் வி. கந்தவனம் அவர்களைப் பிரதம ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் ஆத்மஜோதிச் சஞ்சிகை கடந்த ஆண்டு நாவலர் பெருமான் சிறப்புமலரையும் வெளியிட்டு, சைவ எழுச்சியையும் உணர்வையும் ஏற்படுத்தி வரும் சிறந்த சஞ்சிகையாகும்.

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல் (குறள் 505)

என்ற அய்யன் திருவள்ளுவரின் திருக்குறளுக்கு அமைய, அன்னை அவர்கள் ஆற்றி வரும் அரும் பெரும் பணிகளே அவரின் இன்றைய பெருமைக்கு உரைக் கல்லாக அமைந்தவை.

“எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்”

என்ற பாரதியாரின் குறிக்கோளுடன், சைவத் தமிழ் சமூகப் பணிகளை ஆற்றி வருவதோடு அன்னை அவர்கள் தமது பிறந்த நாளை அறக்கொடை விழாவாக நிகழ்த்தி அறப்பணிகளையும் ஆற்றி வருகிறார்.

அன்னை அவர்கள் பல்லாண்டு வாழ, இறைவனை இறைஞ்சி வேண்டி அவர்கள் பணிகளும் தொண்டும் சிறந்து விளங்க உளமார வாழ்த்தி அமைகின்றேன்.

தி. விசுவலிங்கம்
தலைவர். சைவ சித்தாந்த மன்றம், கனடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்று ஆறுமுகநாவலர் இன்று அன்னை தங்கம்மா

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பது அன்னை தங்கம்மாவின் மனமார்ந்த கொள்கை. மனிதர் சமூகப் பிராணிகள் என்று சொல்லுவார்கள். மனிதரிற் பலர்தமது நலன்களை மட்டுங் கருதாமல், இறைவனுக்கும், சமயத்துக்கும் சமூகத்துக்கும் பணி செய்தலையே குறிக்கோளாகக் கொண்டு செயற்படுகின்றனர். இறை பணிக்கு வழிகாட்டியவர் அப்பர் சுவாமிகள். அவருடன் மற்றைய நாயன்மார்கள் சமயப் பணி செய்து உதவினார்கள்.

இன்று, சமயப் பணிகள் என்று சொல்லும்போது கிறிஸ்தவப் பொது மக்களும் அவர்களுக்குத் தோள் கொடுக்கின்றார்கள். மேலை நாட்டாரைத் தமிழராகிய நாம் பலவகையான விஷயங்களிலும் பின்பற்றி வருகிறோம். எமது பொருளாதாரத்தை வளர்க்க விரும்பியே இங்கே வந்தோம். வந்த நாம் முற்று முழுதாக அவர்களைப் பின்பற்றுகிறோம். சுருக்கமாகச் சொல்வதானால் தமிழ்க் கனடியராக மாறமுயன்று கொண்டிருக்கிறோம்.

முற்று முழுதாக என்று சொன்னேன். ஆனால் ஒன்று மட்டும் எமது கண்ணிற் படுவதில்லை. அது என்னவாயிருக்கும்? அதுதான் சேவை. எமது சுயநலம் அவர்களின் சேவை மனப்பான்மையைப் பின்பற்ற விடாமல் தடுக்கிறது. எங்கள் எல்லோருக்கும் சைவ சமயத்திலே பற்று இருக்கிறது. சைவம் வளரவேண்டும் என்று விரும்புகிறோம். ஆனால் அதனை மற்றவர்கள் செய்யட்டும் என்று நினைக்கிறோம். அங்கே தான் பெரும்பிழை விடுகிறோம். கிறிஸ்தவ குருமார் தமது சமய வளர்ச்சிக்காகப் பெரும் பாடுபடுகிறார்கள். தந்திரங்களைக் கையாளுகிறார்கள். வறியவர்களை, அகதிகளை ஆதரித்து மயக்கி மனதை மாற்றுகிறார்கள். இதற்கெல்லாம் பணம் கடவுளா கொடுக்கிறார்? பொதுமக்கள்தான் வாரி வழங்குகிறார்கள்.

அண்மையில் கடல் அழிவு கேட்டு அள்ளி அள்ளிக் கொடுத்தோம். நன்றி. சுவாமிக்கு அபிஷேகம் செய்கிறோம். கடவுள் தந்ததில் ஒரு பகுதியைக் கடவுளுக்குக் கொடுப்பதாக நினைக்கிறோம். உண்மை என்ன? இறால் போட்டுச் சுறா பிடிக்குத் தந்திரந்தான். பெரிய சலுகைகளைக் கேட்டுத் தானே அபிஷேகம் செய்கிறோம். சேவை நோக்கமல்ல. எங்கள் சைவச் சமூகமும் எங்களுடன் சேர்ந்து வளர வேண்டும். இந்தப் பொது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கங் கொண்டவர்கள் ஒருசிலர் இடையிடையே தோன்றுகிறார்கள்.

இன்று, அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அம்பாளுக்கான பணியிலே தொடங்கி, தமிழ்ப்பணி, சமயப்பணி, சமூகப்பணிகள் மிகப் பல செய்து வருகிறார்கள். அருளம்மையாரை அன்னை என்றுதான் அழைக்க விரும்புகிறேன். அநாதைகளான 50, 60 பெண் குழந்தைகளுக்காக மாடி விடுதி கட்டி ஆதரித்து வருகிறார். போர்க் காலத்தில் இந்தப் பிள்ளைகளைக் காப்பாற்றுவதற்காக அவர் பட்ட துன்பம் சொல்லி மாளாது. பூனை நாலைந்து குட்டிகளைத் தான் இடம்மாற்றிக் கொண்டு திரியும். அறுபதையுங் கொண்டு போக வாகனங் கிடைக்குமா? வாகனங் கிடைத்தாலும் பெற்றோல் கிடைக்குமா? முதலில் இராமநாதன் கல்லூரியில் இடங் கிடைத்தது. 1995 ஒக்டோபர் 30ம் திகதி (Exodus) திடீரென லட்சக் கணக்கான மக்களோடு மூட்டை முடிச்சுகளுடன் கைதடிப் பாலத்தைக் கடந்து 60 பேரையுங் கொண்டு போவதென்றால் சின்ன வேலையா? சனநெரிசல், பாலத்தைக் கடந்து முடிய ஒரு மணித்தியாலத்துக்குமேல் எடுத்ததாம். போதாக்குறைக்கு இராணுவ ஹெலி சுடத் தொடங்கிவிட்டது. இந்த நிலையில் இடம்பெயர்ந்து சென்ற எமது உறவினரான தாயும் மகளும் சுட்டுக் கொல்லப்பட்டனராம். இது நான் அறிந்தது. இன்னும் வேறு எத்தனை கொலை நடந்ததோ தெரியாது. இந்தச் சூழ் நிலையில் அறுபதையுங் கொண்டு போய்ச் சேர்ப்பதென்றால் எப்படி? பக்கத்தில் வருபவர்கள் தங்கள் பிள்ளை குட்டிகளைத் தேட வேண்டிய நேரத்தில் எங்கள் அன்னைக்கு உதவக் கூடியவர் யார்? பராசக்தி துர்க்காதேவிதான் துணை. நான் முந்தி நீ முந்தி என்று சனங்கள் அல்லறப்பட்ட வேளையில் பெண் குழந்தைகளும் குமர்ப்பிள்ளைகளுமாக 60 பேருக்குத் தங்கும் இடம் பிடிப்பது எவ்வாறு! சிறிது சிந்தித்துப் பாருங்கள்.

இங்ஙனம் பெருந் துன்பம் அநுபவித்தவர் 2000இல் அன்னையர் இல்லமும் தொடங்கியிருக்கிறார். அன்னை திரேசாவைப் போலச் சைவர்களுக்கு வாய்த்திருக்கிறார் அன்னை தங்கம்மா. சைவக் கோயில்களும் மடாலயங்களும், நிதியை வங்கியிற் போட்டு வைக்கிறார்களே அல்லாமல், ஏழைகளின் வயிற்றிற் போடுவதில்லை. இதனாலேதான் கிறிஸ்தவர் அகதிகளை இலகுவாக மதம் மாற்றி விடுகிறார்கள்.

“அன்பு நெறி” பத்திரிகையில் வெளியான அன்னையின் பேச்சில் ஒரு தெய்வசக்தி இருக்குஞ் செய்தியை நினைவுபடுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது உரையை நிறைவு செய்கிறேன். கிறிஸ்து மதத்தைத் தழுவ முடிவு செய்திருந்த கோலாலம்பூர்த் தமிழர்கள் அன்னையின் சைவ சித்தாந்தக் கருத்து நிறைந்த தர்க்க ரீதியான சொற்பொழிவைக் கேட்டு மனம் மாறிவிட்டதாக வைத்தீஸ்வரக் குருக்கள் எழுதியிருக்கிறார். அன்று ஆறுமுக நாவலர் போல இன்று அன்னை விளங்குகிறார்.

மேலும் வாரிசுகள் பலரை உருவாக்கிக் கொண்டும் இருக்கிறார். அன்னை இன்னும் பல்லாண்டு வாழ, பராசக்தி துர்க்காதேவி திருவருள் பாலிப்பாராக.

நா. சிவலிங்கம்
செல்வமலைப் பிள்ளையார்
இந்து ஆலயம்
இரிச்மண்ஹில்


N. K. S. DRAPERY & BLINDS FABRIC LAND

* VERTICAL BLINDS
* VENETIAN BLINDS
* ROLLER BLINDS
* DRAPERIES
* CURTAINS
* SHUTTERS



உங்களுக்குத் தேவையான சகல விதமான யன்னல் கேட்டின் துணிவகைகளும் DRAPERYக்குத் தேவையான துணிவகைகளும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

தொடர்புகளுக்கு: N. கேதா (KETH)
210 Silver Star Blvd, Unit #825,
Scarborough, ON.
TEL: 416-321-6420




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்ணில் நல்லவண்ணம் மக்களை வாழவைக்கும்
# துர்க்காதுரந்தரி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்அடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்துகி டப்பதே

என்ற அப்பர் பெருமான் திருவாக்குக்கு அமையப் பணிசெய்து கிடக்கவென்று தங்கம்மா அவர்கள் யாழ்ப்பாணம் மல்லாகத்தில் 1925ஆம் ஆண்டு யனவரி 7ஆந் திகதி பிறந்தார். தவஞ் செய்த பெற்றோர் திருவாளர் கந்தர் அப்பாக்குட்டியும் திருமதி தையற்பிள்ளை அப்பாக்குட்டியுமாவர்.

மல்லாகம் அமெரிக்க மிசன் பாடசாலையில் ஆரம்ப கல்வியையும் மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலையில் இடைநிலைக் கல்வியையும் கற்று 1941ஆம் ஆண்டு சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் ஆசிரியர் பயிற்சி பெறுவதற்குத் தெரிவுசெய்யப் பெற்றார். தங்கம்மாவின் சமயவாழ்வுக்கு வித்திட்ட கோயில் இராமநாதன் கல்லூரியேயாகும். அங்கு புத்தகப் படிப்புக்குப் புறம்பாக சிவவழிபாடும் திருமுறை ஓதுதலும் புராணபடனமும் குருபூசைகளும் கட்டாயமான செயன்முறைப்பாடுகள்; ஒழுக்கமும் கட்டுப்பாடும் உயிர்நிலைப்பாடுகள். இப்பாடுகளில் தோய்ந்து ஒழுகி இறுதித் தேர்விலும் சிறப்பாகச் சித்திபெற்று 1944ல் பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியராக வெளியேறினார்.

தங்கம்மா அவர்கள் முதன்முதலாகக் கற்பிக்கத் தொடங்கியது மட்டக்களப்பு புனித சிசிலியா ஆங்கிலப் பாடசாலையில். ஏறத்தாழ மூன்று ஆண்டுகளின்பின் கொழும்பு பாத்திமா பெண்கள் பாடசாலை வழங்கிய ஆசிரியர் பதவியை ஏற்றுக் கொண்டார். 1964ல் தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கு இடமாற்றம் கிடைத்தது. கிறித்துவம், இஸ்லாம் ஆகிய சமயங்களையும் அவற்றின் ஒழுக்க நெறிகளையும் நன்கு அறிந்து கொள்ள இப்பாடசாலைச் சூழல்கள் தங்கம்மாவுக்கு வாய்ப்புக்களை அளித்தன. இந்த அனுபவங்கள் அவரது பார்வையை உலகளாவிய நிலையில் விரிவடையச் செய்து “ஒன்றே குலம் ஒருவனே தேவன்” என்ற திருமந்திரத்துக்கு விளக்கம் அளித்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாதானும் நாடாமல் ஊராமால் என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு

என்றார் வள்ளுவர் பெருமான். அதற்கேற்ப தங்கம்மா அவர்களும் ஆசிரியரான பின்னர் பாலபண்டிதர், பண்டிதர் ஆகிய பரீட்சைகளிற் சித்தியடைந்து சென்னை சைவசித்தாந்த சமாசம் நடத்திய சைவப்புலவர் பரீட்சையிலும் தேர்ச்சி பெற்றார். இராமநாதன் கல்லூரியிற் கற்ற காலத்திலேயே பேசத் தொடங்கியவர் பின்னர் நாடறிந்த சொற்பொழிவாளராகப் பவனிவரத் தொடங்கிவிட்டார். திருவிழாக்கள், இலக்கிய விழாக்கள், கருத்தரங்கங்கள், பட்டிமன்றங்கள், சனசமூக நிலையங்கள் என்று எல்லா மேடைகளிலும் தங்கம்மாவின் தங்கக் குரல் ஒலித்தது. எனினும் உலகியல் அறிவை மெய்ப்பொருள் காணும் அறிவு முந்திக் கொண்ட நிலையில் சமய வாழ்வுக்கே தன்னை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும் என்னும் மனப் பக்குவமும் நிலைபெற்றுக் கொண்டது.

இந்தப் பக்குவநிலையை வளர்த்தெடுத்த அவரது குலதெய்வமாகிய துர்க்கை அம்மன் 1961ல் அவரது வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தி ஆட்கொண்டருளினார். இந்த ஆண்டுதான் துர்க்காதேவி ஆலயத்தின் திருப்பணிச் சபை அங்கத்தவராக அம்மையார் சேர்ந்த ஆண்டு.

1966ஆம் ஆண்டு பொருளாளர் பதவி அவரை வந்தடைந்தது. ஏற்கனவே தமது நாவன்மையால் தமிழுலகத்தில் பெருமதிப்பைப் பெற்றுக் கொண்ட அவருக்குத் திருப்பணிக்கு நிதி திரட்டுவதிற் சிரமம் எதுவும் இருக்கவில்லை. கோயிற் கட்டிடப் பணிகள் தடையின்றித் தொடர்ந்தன. வரவுசெலவுகளைக் கண்ணியமாகவும் கவனமாகவும் கையாண்டு பணியே தன்கடன் என்றிருந்த நிர்வாக சபையின் பொருளாளருக்கு 1976ல் தலைமைப் பதவியும் வந்து சேர்ந்தது. துர்க்கைக்குப் பணி செய்யத் துணிவோடு ஏற்றுக் கொண்டார். துரிதமாக எஞ்சியுள்ள திருப்பணிகள் தொடரலாயின.

தலைமைப் பதவியேற்றதைத் தொடர்ந்து உட்பிரகாரக் கொட்டகை, தேர்முட்டி, சித்திரத்தேர், அலுவலகம், சண்டேசுரர் கோயில், ஞானசுரபி மண்டபம், இராசகோபுரம், அலங்கார வெளிவாயில், அன்னபூரணி மண்டபம், துர்க்கா புஷ்பகரணித் தடாகம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்த்த மண்டபம், அன்னபூரணி கல்யாண மண்டபம், சுற்றுமதில் ஆகியன பத்து ஆண்டுகளுக்குள் கட்டி முடிக்கப்பட்டன.

கோயில் ஆகம விதிகளுக்கேற்ற முறையில் முழுமையாகக் கட்டி முடிக்கப்பட்ட பின்னர் தலைவர் பொதுப்பணிகளுக்கான திட்டங்களிற் கவனஞ் செலுத்தத் தொடங்கினார். மகளிர் இல்லம், குழாய்க்கிணறு, அகதிகள் வெளிமண்டபம், நூலகம், பணியாளர் விடுதி, புதிய அன்னதான மண்டபம், நல்லூர் துர்க்கா சிறுகுடில், நல்லூர் துர்க்கா மணிமண்டபம், அன்னையர் இல்லம் ஆகியன அமைக்கப்பட்டன. இவற்றால்

படமாடக் கோயிற் பகவர்க்கொன் றீயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா
நடமாடக் கோயில் நம்பர்க்கொன் றீயில்
படமாடக் கோயில் பகவர்க்குத் தாமே

என்னும் திருமந்திர தத்துவத்தை செயன்முறையிற் காட்டி, மக்களை மண்ணில் நல்லவண்ணம் வாழவைப்பதே உண்மையான இறைவழிபாடு என்பதை உலகத்தவர்க்கு உணர்த்தலானார் அம்மையார். தேவாலய நிதியிலிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கும் யாழ்.பல்கலைக்கழகச் சைவசித்தாந்த பீடத்துக்கும் தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலைக்கும் நன்கொடைகள் செய்துள்ளார். 1990ஆம் ஆண்டு ‘சிவத்தமிழ்ச் செல்வி பிறந்தநாள் அறநிதியம்’ என்ற பெயரில் வங்கிக் கணக்கு ஒன்றை ஆரம்பித்து அதன்மூலம் பலவகையான அறப்பணிகளைச் செய்து வருகின்றார்.

இடையிடையே சொற்பொழிவுத் தொண்டும் எழுத்துப் பணியும் தொடர்ந்து கொண்டே இருந்தன. கற்றோருக்குச் சென்ற இடமெல்லாஞ் சிறப்பு. அம்மையாருக்குக் கிடைத்த சிறப்புக்கள் கூறிமுடியா. பெற்ற பட்டங்களும் பல. ஒருசில வருமாறு:

1966: செஞ்சொற் செம்மணி - மதுரை ஆதீனம்
1970: சிவத்தமிழ்ச் செல்வி - காரைநகர் சிவன்கோவில்
1972: திருவாசகக் கொண்டல் - மலேசியா
1973: சிவஞான வித்தகர் - அகில இலங்கை இந்து மாமன்றம், கொழும்பு
1973: துர்க்காதுரந்தரி - துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1978: ‘கந்தபுராணச் சொற்பொழிவு’ நூலுக்கு இலங்கை சாகித்திய மண்டலப் பரிசு
1982: சமாதான நீதவானாகச் சத்தியப் பிரமாணம் எடுத்தல்
1985: மணிவிழா
1991: கலாசூரி - இலங்கை அரசு
1998: கௌரவ கலாநிதிப் பட்டம் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
1999: துவிஞோத்தமி - சைவசித்தாந்த மன்றம், கனடா
2000: பவள விழா
2005: முத்து விழா

அருள்மிகு துர்க்காதேவி எமக்கு வழங்கிய இணையற்ற நன்கொடை அம்மையார். பேச்சுவன்மை, நிர்வாகத் திறன், செயன்முறைச் சிறப்பு என்பவற்றுக்கு அப்பால் அவரது மக்கட் பண்பே அனைவரையும் கவர்ந்திழுக்கும் காந்த சக்தியாகவுள்ளது. சக்தி வழிபாட்டை வளர்த்தெடுத்த அம்மையார் சைவ சமயப் பணிகளில் ஈடுபட்டுவருபவர்க்கெல்லாம் உந்துசக்தியாகவே இருந்து வருகிறார். அடியார்கள் அவரில் துர்க்கையைக் காண்கிறார்கள். அதற்குக் காரணம் அவரது தாய்மைக் குணம் - தாராள மனப்பான்மை. அவர் வாழ வேண்டும்!

**Dr. Shan A. Shanmugavadivel & Associates**
**டாக்டர் அ. சண்முகவடிவேல்**
**Orthodontics Implants**
**பற்களுக்கு கிளிப் போடுவதிலும்** Implant **பல் கட்டுவதிலும் பயிற்சி பெற்றவர்**
**RAINBOW VILLAGE DENTAL OFFICE**
**2466 Eglinton Avenue East, Unit:7**
**Scarborough, Ontario, M1K 5J8**
**Monday to Saturday**
Near Kennedy Subway (Rainbow Village Building)
**416-266-5161**
**MAIN SQUARE DENTAL OFFICE**
**7-2575 Danforth Avenue, Toronto, ON. M4C 1L5**
Mon, Tues, Wed, Thurs, Fri, Sat & Sun - Near Main Subway
Dr. Shan - (Wedn), Dr. Kalaichelvan (Thurs & Sun)
(Free consultations on alternate Sundays)
Dr. Yao San Other days)
**416-690-0121**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தாந்த ஞானக் களஞ்சியம்

## நூலாய்வு

### பேரறிஞர் முருகவே பரமநாதன்

கடந்த இதழ் தொடர்ச்சி:

ஏழாலையூரின் வரலாற்றோடு பின்னிப்பிணைந்த பல அறிவுசார் பிரமுகர்களின் வரலாற்றோடு முக்கியத்துவம் பெறும் இலக்கியகலாநிதி சத்திமுற்றப்புலவரின் புனிதமான கதை சொல்லும் வாழ்க்கைக் கண்ணோட்டமே ஒரு ஆய்வுரையாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஏழாலை ஏழாலையாக மருவிய சங்கதியுடன் ஏழாலயங்களால் அம்மண் அலங்கரிக்கப்படுவதால் அப்பெயர் வந்ததாகக் கட்டுரையாளர் கூறுகின்றார். உலகறிந்த தமிழறிஞர் சிவை தாமோதரம்பிள்ளை, காசிவாசி செந்திநாதையர், சைவசித் தாந்தி ஸ்ரீமத் ஐயம்பிள்ளை பொன்னையா, அருளானந்தசிவம் என்போராற் பிரமாணிக்கம் பெற்ற ஏழாலையூரின் மேல்பாலமைந்த கோட்டைக்காடு எனும் சிற்றூரில் வாழ்ந்த சைவப் பெருங்குடியில் வந்துதித்த முத்தர் என்பவர் மனைவியாய்க் கொண்ட அன்னப்பிள்ளையின் மணிவயிறு வாய்த்ததால் மண்ணிற் தவழ்ந்தவர்கள் ஐவர். மூவர் பெண்கள் - மினாட்சி, காமாட்சி, விசாலாட்சி ஆண்கள் இருவர் - ஆறுப்பிள்ளை, கந்தையா. கந்தையா செல்லமாகக் கந்தசாமி என அழைக்கப்பட்டார். மாவைக்கந்தனில் வாரப்பாடுமிக்க முத்தர் தம்மக்கட்கு வைத்த பெயர் அவரின் பத்திவிசுவாசத்தை வெளிப்படுத்துகிறது. பண்டிதரும் வாரந்தவறாது மாவைக் கந்தன் சந்நிதிக்கு-அர்ச்சனைத்தட்டோடு சென்று வழிபாடியற்றி வந்தாரென மலராசிரியர் எழுதியுள்ளார். இந்த ஈடுபாட்டால் மாவைப் பிள்ளைத்தமிழ், மாவைப்பள்ளு எழுந்திருக்கிறது. இவர் 1922-1930 வரை சைவ சன்மார்க்காவில் கல்வி கற்றார். பின் அளவெட்டி சீனன் கலட்டி தமிழ்ப் பாடசாலையில் கல்வி கற்றார். 1932இல் சிரேட்டபாடசாலை விடுகைச் சான்றிதழ் பெற்றார். Teachers' Certificate 1934ல் பெற்றார். 1936ல் சென்னை சைவசித்தாந்த சமயப் பரீட்சை எழுதினார். பின்னர் இலண்டன் பல்கலைக்கழகம், இலங்கைப் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்றதோடமையாது தமிழ்-சைவம் இரண்டையும் துறைபோகக் கற்று-வடமொழி, ஆங்கிலம் இரண்டிலும் நற்புலமை பெற்று வாழ்நாள் முழுமையும் ஆய்வாளராயும் திகழ்ந்தார். இவர் நடமாடும் நூலகமாகவும் விளங்கினார். எனவே பண்டிதரின் வரலாறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடும் மற்றவர்கட்கு முன்மாதிரியாகவும் அமைந்தமையை இம்மலரால் நாம் அறிகின்றோம்.

இவர் நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரியிலும், மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் மேலான சேவையாற்றியுள்ளார். இலக்கணச் சுருக்கத்தில் இருந்து இலக்கணக் கொத்து வரை தேடிப்படித்த மாமேதையிவர்.

பண்டிதர் கந்தையனாரின் வடமொழிப் புலமையை வடமொழியில் தீர்ந்த ஞானம் வாய்க்கப் பெற்ற பண்டிதர் க. சச்சிதானந்தன் (B.A.Hon) London M.Phil (London) அவர்கள் வாக்காய்க் கேட்போம்.

“பண்டிதர் கந்தையாவும் வேதாகமங்களில் விற்பனஞ் செய்தார்கள். அவருடைய கட்டுரைகளிலும் கடிதங்களிலும், வடமொழிப் பிரயோகம் பொருத்தமான இடத்தில் அமையும். எனக்கு எழுதிய கடிதங்களில் ஒவ்வொன்றிலும் வடமொழி எடுத்துக் காட்டு ஒன்றாவது இருக்கும். அவர் வடமொழியைச் சுன்னாகம் காவிய பாடசாலையிற் படிக்கும்போது ஆரம்பித்திருக்கலாம். கிரந்த விபியிலேயே வடமொழியை எழுதுவதனால் அப்படி ஊகிக்கிறேன். கணேசையரிடம் அப்பாடசாலையிற் கற்றாராம்.

சைவசித்தாந்த நூல்கள் யாவிலும் வடமொழியே நிறைய இருப்பதைக் காண்கிறேன். அதனால் பண்டிதர் அவர்களுக்கு சைவசித்தாந்த நூல்களின் உண்மைக் கருத்துப் புலனாகிவிடும். தத்துவம் என்ற சொல்லே இருவடமொழிச் சொற்கள் சேர்ந்தது. தத்அது, துவம். நீ, அதுநீ என்பது பொருள். பாசியங்கள், ஆகமங்கள் யாவும் வடமொழியிலேயே உள்ளன. அதனால் மூலநூல்களைப் படித்துச் சரியான விளக்கம் பெற்றார். அதனாலேயே அவர் நூல்கள், கண்டனங்கள் சரியான வழியில் தெளிவாயமைந்தன. இது வேறுயாருக்கும் அமையாது. அவர் அயலவர் அமரரான மு. ஞானப்பிரகாசரும் வடமொழி கற்றவர். ஆனால் பண்டிதரைப்போல ஆழ்ந்த ஞான அறிவு வடமொழியிற் பெற்றவரோ என்று அறியும் வாய்ப்பு எட்டவில்லை.

- சித்தாந்த ஞானக் களஞ்சியம். பக்கம் 49

இப்பத்தியிலே நூல் ஆய்வு செய்வோர் கவனத்தை ஈர்க்கிறது பண்டிதர் வெளிப்பாடு.

“மாவிட்டபுரக்கந்தனுக்கு ஒரு பிள்ளைத் தமிழ் பாடினார். மாவை ஆதீனத்தில் அரங்கேறியது. அதற்குப் பேராசிரியர்கள் கல்விமான்கள் அரங்கேற்றுரை நிகழ்த்தினார்கள். நானும் வீட்டில் இருந்தபடி ஒலிபெருக்கியிற் கேட்டேன். அவரை வானளாவப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழ்ந்தார்கள். நடேஸ்வராக் கல்லூரியில் அதிபராய் அன்றிருந்த சோமசுந்தரம் பகழிக் கூத்தரையும் விஞ்சிவிட்டார் என்று புகழ்மாலை சூட்டினார்கள். அடுத்தநாள் சந்தித்தபோது மிகத்துக்கத்துடன் அரங்கேற்று வைபவத்தை வருணித்தார். கந்தையா கந்தையா என்று புகழ்ந்தார்களேயன்றி நூலை ஒருவரும் படிக்கவில்லை. ஆளைத்தான் படித்தார்கள் என்று விசனமுகம் காட்டியது. அளவெட்டிச் சிதம்பரப்பிள்ளை B.A., B.Sc. எண்கணித விஞ்ஞான குரு அவரிடம் சென்றபோது கந்தையாவின் ஒரு கவிதையில் முருகன் பார்வதியோடு செல்லக் கோபங் கொண்டதான பகுதியை வாசித்து இரசித்தார். இதைப் பண்டிதர் இடம் கூறினேன். ஓமப்பா! அவர் நூலைப் படித்தார். பேசவந்தவர்கள் ஒருவர் கூடப் படிக்கவில்லை என்றார்."

- மேலது பக்கம் 49-50

சைவப் பேராசான் வி. சங்கரப்பிள்ளையவர்கள் 'ஞானம்' என்ற தலைப்பில் சைவசித்தாந்த நோக்கில் பதிஞானம், பாசஞானம் பற்றி எடுத்து விரித்துப் பண்டிதரின் சமய ஞானம் பற்றிச் சிலாகித்து அவரின் வாழ்வுத் தடம் பற்றிப் பின்வருமாறு எழுதியுள்ளார்.

"அருணந்தி சிவாச்சாரியாரின் கூற்றுக்கிசைய பண்டிதர் ஐயா அவர்கள் ஞானநூலை ஓதுதல் ஓதுவித்தல், ஞானநூற்பொருளைச் சிந்தித்தல், தான் கேட்டல் ஞானநூற் பொருளைத் கேட்பித்தல் என்னும் ஐவகைப்பட்ட ஞான வேள்வியைத் தன்வாழ்க்கையில் மேற்கொண்டார். ஞானநூலாகிய சிவஞானசித்தியாரை யாவரும் கற்று விளங்குவதற்காக விளக்க உரை எழுதி சிவஞான சித்தித் திறவு கோல் என்ற நூலை வெளியிட்டார்.

- மேலது பக்கம் 59

அறுபத்தேழாம் பக்கத்தில் பேராசிரியர் சு. சுசீந்திரராசா அவர்கள் பண்டிதரின் நுண்ணாய்வை இப்படி வரைந்துள்ளமை அவதானத்துக்குரியது:

"பண்டிதர் ஐயா அவர்கள், மேல்நாட்டார் சைவசித்தாந்தம் பற்றி ஆங்கிலத்திலே எழுதி வெளியிட்ட நூல்களை அலசிப் படித்துள்ளார். அவற்றிலுள்ள சில தவறான விளக்கங்களைச் சுட்டிக் காட்டியுள்ளார். சைவசித்தாந்தக் கருத்துக்களுக்குப் பண்டிதர் சில புதிய விளக்கங்களைத் தந்துள்ளார்."

- மேலது பக்கம் 67

வேற்று மதத்தவர் - நிப்பாகக் கத்தோலிக்க மத பூஜ்ஜியர் ஒருவர் சைவசித்தாந்தம் பற்றி எழுதிய நூலில் ஆழங்காற்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காய்தலுவத்தலின்றி அன்னாரின் அறிவாடலைப் போற்றியும் இருக்கிறார்.

"பண்டிதர் தமிழ் மொழி இலக்கியம் சைவம், சமுதாயம் இப்படிச் சில விடயங்கள் பற்றி எனக்கு எழுதிக் கொண்டிருந்தார். யானும் எட்டியவற்றுக்குப் பதிலெழுதி வந்தேன். ஒருமுறை கத்தோலிக்க குரு ஒருவர் (அருட்தந்தை ஜெனரால்ட் சவரிமுத்து) சைவசித்தாந்தத்தைப் பற்றி ஆங்கிலத்தில் நிகழ்த்திய உரையொன்றின் பிரதி எனக்குக் கிடைத்தது. அதனை அவரது தங்கை திருமதி அமிர்தா சிவபாலன் தந்தார். அதற்கு கருத்துரை சொல்வதற்கு யான் யாரென எண்ணி, பண்டிதருக்கு அனுப்பினேன். அதனைப் பண்டிதர் படித்துப் பார்த்து விட்டு - நல்லறிவுடன் மிகவும் நிதானமாக ஆற்றப்பெற்ற உரையெனப் பாராட்டியுள்ளார்."

- சு. சுசீந்திரராசா கருத்து பக்கம் 75

பண்டிதர் ஒருவரிடம் உள்ள தகுதியைப் போற்றுபவர். இவரது ஆழமும் விசாலமும் நிறைந்த அறிவுப் பெருமையை ''கைலாசபதிஸ்மிருதி" யென்ற ஆக்கத்தை அளந்து யாழ் பல்கலைக்கழகம் டி. லிற்பட்டம் வழங்கிக் கௌரவித்தமை அவரின் மதிப்பீட்டுக்கான அதியுயர் விருதாகும்.

பண்டிதர் அய்யா அவர்கள் ஆழ்ந்தகன்ற நுண்ணிய கருத்துக்கள் அடங்கிய பல நூல்களையும், ஆய்வுரைகளையும், தக்க கண்டனங்களையும் சித்த சுத்தியுடன் வெளியிட்டார். எனினும் பிற்பகுதியில் அவர் தந்த மூன்று பொறுப்பான நூல்களைப் பல கல்வி வல்லுநர்கள் மதித்து மனமாரப் போற்றியுள்ளனர்.

ஒன்று - பெரிய புராணசூசனம் - மலேசியாவில் கோலாலம்பூர் சைவசித்தாந்த நிலையம் வெளியிட்டது. நாவலர் விட்ட குறையின் பூர்த்தியாய் மிளிரும் உயர்நூல்.

இரண்டு - சிந்தனையாளர் கைலாசபதியவர்களின் சிந்தனைகளை சைவசித்தாந்த நோக்கில் ஆய்ந்து எழுதிய கைலாசபதி ஸ்மிருதி. வெளியீடு யாழ் பல்கலைக்கழகம்.

மூன்றாவது திருக்கேதீஸ்வர மான்மியம்.

1. புராதனகாண்டம் - திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபை
2. பொற் பொளிர் காண்டம்
3. கரந்துறை காண்டம்
4. நஷோதய காண்டம்
5. நித்திய நைமித்திய காண்டம்

இனி இப்பெரியார் பற்றிய சில அறிஞர்களின் கருத்துக்கள் வருமாறு.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SITA'S EXPOSTULATION TO RAMA

**C. S. Rajaratnam**

The importance of Ramayana as far as Hinduism is concerned is greater than that of Maha baratha. The story became very popular in later times and adopted paraphrases of Valmiki's epic. It was composed in all the languages of India, so that it became part of the folk of India. It was carried to South-Asia and Indonesia, where it was equally popular. The story has a strong ethical value on the whole land. Rama is the epitome of all the virtues, an example of all the people of honour, courage and loyalty. Rama always does the right thing. He cheerfully accepts exile so that his father may be true to his word, and he never gives way to evil emotions such as rage and self pity. His brother Laksmana is ethically almost his equal. Sita is the ideal of wifely virtue, in loyalty and faith and her expostulation to Rama, is when he decides to go off to the forest without her, is one of the best passages of Sanskrit literature.

Sita who always spoke kindly to her husband and deserved kindness from him and said:

My Lord, a man's father, his mother brother son of daughter-in-law all experience the same effects of their past deeds and suffer an individual fate.

But a wife and she alone, must share her husband's fate. Therefore I too, have been ordered to live in the forest. It is not her father or mother not her sons or friends or herself, but her husband, and he alone, who gives her a permanent refuge in this world and after death. If you must leave this very day for the trackless forest, Ragava I will go in front of you softening the thorns and sharp kussa grass. Cast out your anger and resentment, like so much of water left out after drinking ones fill. Do not be reluctant to take me, my mighty husband. There is no evil in me. The shadow of husband's feet in any circumstances surpasses the finest mansions an aerial chariot or even flying through the sky.

My father and mother have instructed me well and I do not have to be told now the proper way to behave.

I shall live as happily in the forests as if were my father's



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

house,and be faithful to my husband. I will obey you always and practise self-discipline and chastity what pleasure I shall share with you, my mighty husband, in the honey scented forests. O Rama! bestower of honour, you have the power to protect any other person, why then not me. You need not doubt that I can survive on nothing but fruits roots. I shall not cause any trouble.

By living with you I want to see the streams and mountains, the ponds and forests . I want to see the lotus ponds in full bloom, blanketed with geese and ducks, happy in your company, my mighty husband.

What pleasure I shall share with you, my large eyed husband, what bliss for me to be with you like this, were it for a hundred thousand years.

If I were to be offered a place to live in heaven itself, Ragava, right among men, I will refuse it if you were not there. I will go to the trackless forest teaming with dear monkeys, and elephants, and live there as if in my father's house, clinging to your feet, in strict self-discipline. I love no one else, my heart is so attached to you that were to be parted I am resolved to die. Take me! Oh, please grant my request, I shall be of no burden to you.

Despite what Sita said, the best among men who so cherished righteousness was still unwilling to take her, and in order to dissuade her he began to discribe how painful life in the forest is.

But Sita remained firm and Rama had to grant her wish, and in his heart he was glad that she would go with him.

Later Rama went to see his mother Koushalya who was at her prayer, and Lakshman told her the bad news. Then let me come with you pleaded Koushalya "No", Rama answered "Father needs you more than ever now." And with this Koushalya had to agree. Then Lakshman spoke in a tone allowing for no discussion and announced "I will go with Rama and look after him and no one stop me." Later Rama took Sita and Lakshman with him.

We might here mention one important figure in the Ramayana that of Hanuman.If not for his help Rama would never have rescued Sita from Ravana.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

திருக்கயிலாய பரம்பரைத்
திருவாவடுதுறை ஆதீனம்

**சீர் வளர் சீர் ஆதீனகர்த்தரவர்கள்
அலுவலகம்**

திருவாவடுதுறை
609803
23–12–04

அன்புடையீர், திருவருள் சிறக்க,
வணக்கம், தாங்கள் அனுப்பி வைத்த "ஆத்மஜோதி" ஏப்ரல்-ஜுன்-2004, மற்றும் ஜுலை-செப்டம்பர்-2004 மற்றும் ஒன்ராறியோ இந்து சமயப்பேரவையின் 10 ஆண்டுகாலப் பொது அறிக்கை ஆகிய மூன்று புத்தகமும் வந்து சேர்ந்தன. சீர்-வளர்-சீர் குரு மகாசன்னிதானம் அவர்கள் திருக்கண் சாற்றியருளினார்கள். மிக்க மகிழ்ச்சி. தங்களது ஆன்மீகப்பணி மேன்மேலும் சிறக்க ஆதீனத்தின் நல்வாழ்த்துக்கள்.
தாங்கள் தமிழகம் வரும்போது ஆதீனத்திற்கு அவசியம் வருகை வருவதை விரும்புகிறோம்.

இணைப்பு: திருநீற்றுத் திருக்காப்பு
மேலாளர்,
திருவாவடுதுறை ஆதீனம்

## அருள்மிகு நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் இந்துசமயப் பேரவை நடத்திய சமய நிகழ்ச்சிகள்

### மகாசிவராத்திரி விழா


8-03-2005 செவ்வாய்க்கிழமை மகா சிவராத்திரி அன்று திருவாசகம் முற்றோதல் நடத்தப்பட்டது. ஒவ்வொரு சாம அபிசேகங்களின் பொழுதும் சிவநாமசங்கீர்த்தனம் பக்தி சிரத்தையுடன் பேரவையின் சிவனடியார் திருக் கூட்டத்தினரால் சொல்லப்பட்டது

### பங்குனி உத்தர விழா


25-03-2005 வெள்ளிக்கிழமை மாலை 3:00 மணி தொடக்கம் 6 மணி வரை திருமுறை பஜனை பேரவைச் சிவனடியார் திருக்கூட்டத்தினரால் நடத்தப்பட்டது. விசேஷ அபிசேக ஆராதனைகளும் இடம் பெற்றன. பேரவையின் காப்பாளர் சைவதுரந்தரர் வி. கந்தவனம், சிவ. முத்துலிங்கம் ஆகியோரின் சொற் பொழிவுகளும் இடம்பெற்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்



அன்புள்ள:

திரு. முத்துலிங்கம் அவர்களுக்கு ஆசிகள்,
தாங்கள் ஆதீனத்திற்கு அனுப்பி வைத்த ஆத்மஜோதி சஞ்சிகை இரண்டும் கிடைக்கப் பெற்றன. மிக்க மகிழ்ச்சி. சித்திரைக்கும் ஆனிக்கும் ஆடிக்கும் புரட்டாதிக்கும் உரிய மலர் கிடைக்கப்பெற்றது. கடல் கடந்து வாழ்ந்தாலும் சமயத்தையும் மொழியையும் மறவாமல் செயற்படுவது எமக்க பெருமையைத் தருகின்றது. இலங்கையின் நாவலப்பிட்டியில் ஆரம்பித்த ஆத்ம ஜோதி சஞ்சிகை இன்று கனடாவில் வெளிவருவது ஈழத்தமிழருக்கு பெருமையைத் தருகிறது. திரு. நா. முத்தையா அவர்களால் வெளியிடப்பட்ட இந்நூல் இலங்கையில் பல சாதனை காணப்படைத்தது. அதேபோல் இன்று கனடாவில் வாழும் தமிழருக்கு ஆத்மீக சிந்தனையும், தமிழ் மொழிப் பண்பாட்டையும் வளர்ப்பதற்கு வெளிக்கொணரும் தங்களையும் தங்களை சார்ந்தவரையும் வாழ்த்துகின்றோம்.

நல்லைநகர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் இன்றைய தலைமுறையினர் அறிந்திருக்கும் வகையில் நூலின் அட்டைப்படம் வந்திருப்பது சிறப்புடையதாகும். இப்பணியை தொடர்ந்து செயற்படுத்த இறைவன் ஆசீர்வதிப்பாராக. சஞ்சிகை நல்ல கட்டுரை, தொகுப்புகளுடன் வெளிவர இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

இரண்டாவது குருமஹாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பராமாச்சாரிய சுவாமிகள்

## சுனாமி நிதி

தாயகத்தில் சுனாமியாற் பாதிக்கப்பட்ட எமது இரத்த உறவுகளுக்கு இந்து சமயப் பேரவை சேர்த்த 2000 டாலரும் TVI இடம் ஜனவரி மாதம் 10ம் திகதி 2005 ஆம் ஆண்டு கையளிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமயச் செய்திகள்**

# உலகளாவிய சிவத்தமிழ் விழாக்கள்

யேர்மனியிலிருந்து வெளிவரும் வெற்றிமணிப் பத்திரிகையும் சிவத்தமிழ் சஞ்சிகையும் இணைந்து 80 வயதையெய்திய கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்குத் தமிழீழம், இங்கிலாந்து, யேர்மனி, கனடா ஆகிய நாடுகளில் விழாக்கள் எடுத்தன.

தாயகத்தில் தெல்லிப்பழையில் 10-01-2005 திங்கள் நடந்த விழாவுக்கு பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமை வகித்தார்.

இங்கிலாந்தில் ஈலிங் நகரத்தில் அருள்மிகு கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தில் 27-01-2005 சனிக்கிழமை நடந்த விழாவுக்கு கலாநிதி மு.க.க. சிவகுமாரன் (வெற்றிமணி, சிவத்தமிழ் ஆகியவற்றின் ஆசிரியர்) தலைமை தாங்கினார்.

யேர்மனியில் 05-02-2005 சனிக்கிழமை நடந்த விழாவுக்குப் பரதமாதேவி கலாநிதி திருமதி வானதி தேசிங்குராஜா தலைமை வகித்தார்.

கனடாவில் 18-02-2005 வெள்ளிக்கிழமை ஒன்ராறியோ இந்து சமயப் பேரவையின் ஆதரவில் நடந்த சிவத்தமிழ் விழா கவிநாயகர் வி. கந்தவனம் தலைமையில் நடைபெற்றது.

எல்லா விழாக்களிலும் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் முத்துவிழாவை முன்னிட்டுச் சிறப்பிதழாக வெளியிடப்பெற்ற 'சிவத்தமிழ்' சஞ்சிகையும் கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாசின் 'காலம் தந்த கைவிளக்கு' என்ற நூலும் வெளியிடப்பெற்றன.

## துர்க்காபுரம் மகளிர் இல்லம் 23வது ஆண்டு நிறைவு


தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் 23ஆவது நிறைவு விழாவும் பரிசளிப்பு விழாவும் 06-02-2005 ஞாயிற்றுக் கிழமை ஸ்ரீதுர்க்காதேவி அன்னபூரணி மண்டபத்தில் நடைபெற்றது. விழாவுக்கு மகளிர் இல்லத் தலைவி கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, J.P. அவர்கள் தலைமை தாங்கி னார்கள்.

யாழ்.பல்கலைக்கழகத்தின்

39ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமயப் பேரவைச் செய்திகள்

## குடைச் சுவாமியின் குருபூசை



குடைச்சுவாமியின் குருபூசை வழமைபோல சுவாமிகளின் பக்தர் களினாலும் இந்து சமயப் பேரவைச் சிவனடியார் கூட்டத் தினராலும் வெகுசிறப்பாக அருள் மிகு நல்லூர் முருகன் ஆலயத்தில் 20-02-2005 ஞாயிற்றுக்கிழமை நடத் தப்பட்டது. காலை 8:30 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை திருவா சகம் முற்றோதப்பட்டது. விசேஷ அபிசேக ஆராதனைகளும் அன்னதானமும் இடம் பெற்றன. சுவாமிகளின் மகிமை களைப் பற்றி பேரறிஞர் முருகவே பரமநாதன், சிவமுத்து லிங்கம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

## திருநாவுக்கரசு சுவாமிகளின் திருத்தாண்டகம் முற்றோதல்

5-2-2005, 12-2-2005 ஆகிய இரு தினங்கள் அப்பர் சுவாமிகளின் திருத்தாண்டகம் முற்றோதல் நடைபெற்றது. அப்பர் சுவாமி களின் ஆறாம் திருமுறையான திருத்தாண்டகம் தத்துவச் செறிவுள்ள ஆன்ம பரிபக்குவம் ஏற்படுத்தும் பாடல்களாகையால் திருமுறை அடியார்களின் விருப்பத்திற்கிணங்க முற்றோ தல் செய்யப்பட்டது.

## ஆத்மஜோதி ஞானசுரபி ஆத்மீகவள்ளல் முத்தையா சுவாமிகளின் 10வது ஆண்டு நினைவு விழா

ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை தாபகர் ஆத்மஜோதி முத்தையா அவர்களின் 2005ம் ஆண்டை அவருடைய நினைவு ஆண்டாகப் பிரகடனப் படுத்தியுள்ளது. யூன், யூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களில் பல விழாக்களை ரொறன்ரோ, மிசிசாகா, மொன்றி யல் ஆகிய மாநகரங்களில் நடத்தவுள்ளது. திருமுறை மனனப்போட்டி, நீதிநூல் போட்டி, பெரியாரின் ஞாபகார்த்த பேச்சுப்போட்டிகள் ஆகியன வற்றையும் பேரவையினர் நடத்தவுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துசமயப் பேரவை நடத்திய சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் முத்து விழா

மேற்படி விழா கனடா அருள்மிகு நல்லூர் முருகன் ஆலயத்தில் 18-02-2005 வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் பேரவையின் காப்பாளர் சைவதுரந்தரர் கவிஞர் வி. கந்தவனம் அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்றது. ஆலய பிரதம குரு பால திருக்குணானந்தக் குருக்கள் ஆசியுரை வழங்கினார். கதிர் துரைசிங்கம் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். சட்டத் தரணி சிவ ஸ்ரீதரன், பேரறிஞர் முருகவே பரமநாதன் தமிழர் தகவல் ஆசிரியர் திரு. எஸ். திருச்செல்வம், கவிஞர் சிவா சின்னத்தம்பி, பேரவையின் சிவனடியார் திருக்கூட்டத்தை சேர்ந்த திருமதி தர்மதேவி சிறி சுப்பிரமணியம், திருமதி அன்னபூரணம் ஞானசம்பந்தர், பேரவையின் பொருளாளர் செ. சோமசுந்தரம் ஆசிரியர், சைவப்பெரியார் நா. சிவலிங்கம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

வரசித்தி விநாயகர் ஆலய முதல்வர் சிவஸ்ரீ டாக்டர் ப. விஜயகுமாரக் குருக்கள் ஆசியுரை வழங்கிச் சிவத்தமிழ்ச் செல்விக்குத் ‘தெய்வப்பாவை’ என்ற பட்டத்தை சூட்டினார். வெற்றிமணி ஆசிரியர் மு.க.சு. சிவகுமாரனின் சிவத்தமிழ் என்ற நூல் வெளியீடும் இடம்பெற்றது. நூல் வெளியீட்டுரையை அதிபர் கனகசபாபதி அவர்கள் நிகழ்த்தினார்.

கவிஞர் வி. கந்தவனம் அவர்கள் கலாநிதி ம. சண்முகதாஸ் எழுதிய ‘காலம் தந்த கைவிளக்கு’ என்ற நூலை அறிமுகம் செய்துவைத்தார். சிவமுத்துலிங்கம் அவர்கள் நன்றியுரை நிகழ்த்தினார்.

மிகவும் அமைதியாக நடைபெற்ற விழாவில் அன்னை சிவத்தமிழ் செல்வியின் அன்பர்கள் ஆதரவாளர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## ஆத்மஜோதியின் இணையத்தள முகவரி

**ஆத்மஜோதி சஞ்சிகையையும், இந்து சமயப் பேரவைச் செய்திகளையும் www.arthmajothy.org இல் பார்க்கலாம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பாவில் 'ஆத்மஜோதி' ஆசிரியர்

'ஆத்மஜோதி' ஆசிரியர் கவிநாயகர் வி. கந்தவனம் யேர்மனி, இங்கிலாந்து ஆகிய நாடுகளிற் பல நிகழ்ச்சிகளிற் கலந்துகொண்டு பெப்பிரவரி 09ஆந் திகதி கனடா திரும்பியுள்ளார்.

22-01-2005 சனிக்கிழமை இலண்டன் IBC வானொலிக்குப் பேட்டி அளித்தார்.

23-01-2005ல் யேர்மனியில் மட்டுவில் ஞானக்குமாரனின் 'வசந்தம் வரும் வாசல்' கவிதை நூல் அறிமுக விழாவிற் சிறப்புரையாற்றினார்.

29-01-2005ல் இலண்டன் ஈலிங் கனக துர்க்கை அம்மன் ஆலயத்தில் வெற்றிமணிப் பத்திரிகையினதும் சிவத்தமிழ் சஞ்சிகையினதும் ஆசிரியர் கலாநிதி மு. க. சு. சிவகுமாரன் ஒழுங்கு செய்த கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் 80 ஆவது அகவை குறித்த சிவத்தமிழ் விழாவிற் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

30-01-2005 காலை இலண்டன் மெய்கண்டார் ஆதீனத்தில் ஆதீன முதல்வர் வண. யோகானந்த அடிகளார் ஏற்பாடு செய்த சந்திப்பு ஒன்றிற் பங்கு பற்றினார்.

பின்னர் சைவ முன்னேற்றச் சங்கம் சங்கத்து நால்வர் மண்டபத்தில் ஒழுங்குசெய்திருந்த முதியோர் கூட்டத்தில் உரை நிகழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து சுடரொளி வெளியீட்டகம் அதிபர் ஐ. தி. சம்பந்தன் அவர்களின் அழைப்பின்பேரில் சுடரொளி வெளியீட்டகம் நடத்தி முடித்த கவிதைப் போட்டி தொடர்பான தமிழ் விழா பற்றிய ஆலோசனைக் கூட்டத்திற் கலந்துகொண்டார்.

01-02-2005 செவ்வாய் பகல் 'இலண்டன் ரைம்' வானொலி நேயர்களின் இலக்கியக் கேள்விகளுக்கு விடையளிக்கும் பேட்டி ஒன்றிற் கலந்துகொண்டார்.

அன்றுமாலை சைவ முன்னேற்றச் சங்கத் தலைவர் திரு. வ. இ. இராமநாதன் அவர்களின் ஏற்பாட்டில் இலண்டன் மகாலட்சுமி ஆலயத்தில் 'செல்வன் கழல் ஏத்தும் செல்வம்' என்ற பொருள்பற்றியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈலிங் கனக துர்க்கைஅம்மன் ஆலயத்தில் ஆசிரியருடன் ‘சிவத்தமிழ்’ ஆசிரியர் கலாநிதி மு. க. சு. சிவகுமரன், பரதமாதேவி கலாநிதி வானதி தேசிங்குராசா, ஆன்மீகத் தென்றல் திரு. த. புவனேந்திரன் மற்றும் ஆலயக் குருக்கள், சிவத்தமிழ் விழாவில் நடனமாடிய பிள்ளைகள் சிலர்.

முருகன் ஆலயத்தில் ‘நாவலர் பெருமான்’ பற்றியும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்.

இரவு ‘சன்றைஸ்’ வானொலியின் ‘தெருவோரத் திண்ணை’ நிகழ்ச்சியிற் பங்குபற்றினார்

05-02-2005 காலை யேர்மனி டோட்மூண்ட் தமிழ் கலாலயப் பாடசாலைப் பரிசளிப்பு விழாவிற் கலந்துகொண்டார். பரிசளிப்பு கவிநாயகரின் கவிதைகளில் நடத்தப்பெற்ற போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு என்பது குறிப்பிடத் தக்கது.

அன்றுமாலை சுவேற்றா நகரில் கலாநிதி சிவகுமாரன் நடத்திய சிவத் தமிழ் விழாவிற் சிறப்புரை யாற்றினார்.

அடுத்தநாள் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் டோட்மூண்ட் நகரில் நடைபெற்ற கவிஞர் நகுலா சிவநாதன் அவர்களின் ‘முனைப்புடன் எழு’ என்ற கவிதை நூல் அறிமுக விழாவுக்குத் தலைமை தாங்கினார்.

08-02-2005 பகல் இலண்டன் ITBC வானொலியின் நேரடிப் போட்டி ஒன்றிலும் கலந்து கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்துத் திருத்தலங்கள்: 8

# சிட்டிவேரம் (சுட்டிபுரம்) அம்மன் கோயில்

**திருமதி சுந்தரகலாவல்லி சிவபாதசுந்தரம்,** B.A. (Cey.)

ஈழத்தில் சிவவழிபாடு இடம்பெற்றதுபோல சக்திவழிபாடும் முக்கிய இடத்தைப்பெற்றிருந்தது என்பது நாம் அறிந்ததே. அன்னை வழிபாடு தொன்மை வாய்ந்தது. சக்தி வழிபாடு சிந்துவெளி நாகரிக காலத்திலிருந்தே இருந்து வந்துள்ளது. அன்னை பராசக்தி, உமாதேவி, துர்க்கை, மகாகாளி என்று சக்தியைப் போற்றி வழிபட்டு வருகிறோம். நாட்டுப் புறங்களிலும் மக்கள் மிக நம்பிக்கையுடன் சக்தி வழிபாடுசெய்து வந்துள்ளார்கள். முத்துமாரி அம்மன், துர்க்காதேவி, வீரமாகாளி என்று பல வடிவங்களில் வைத்து வழிபடுகிறோம்.

சக்தி வழிபாட்டுடன் இணைந்தது கண்ணகை அம்மன் வழிபாடு. தென்னகத்திலே சோழ நாட்டில் பிறந்து பாண்டி நாட்டில் கணவனைப் பறிகொடுத்து, மன்னனுடன் கணவன் கோவலனுக்காக நீதிகேட்டு வாதாடி நீதிகிடைக்காதவிடத்து, பாண்டி நாட்டை எரிகொள்ளச் செய்தபின், சேரநாட்டை அடைந்து கோவலனுடன் சேர்ந்து விண்ணகத்தில் தெய்வமாகிய கண்ணகியின் வரலாற்றை அறிவோம். இளங்கோ அடிகள் வடித்த சிறப்பான சிலப்பதிகாரத்தில் எடுத்துக் காட்டிய சிலம்புச் செல்வியாம் கண்ணகியை கண்ணகை அம்மன் என்றும், பத்தினி என்றும் போற்றி சக்தி வழிபாட்டுடன் இணைத்துக் கொண்டோம்.

கஜபாகு மன்னன் கண்ணகை அம்மன் வழபாட்டை இலங்கைக்கு எடுத்து வந்துள்ளான் என்பதை வரலாற்றுச் சான்றுகள் மூலம் அறிகிறோம். கண்ணகை அம்மனுக்காகப் பல ஆலயங்கள் யாழ் குடாநாட்டிலும் அமைந்துள்ளன. பத்தினி தெய்வத் தனி வழிபாடு இன்று சிங்கள பௌத்த சமயத்தினரிடையேயும் நிலவி வருவதைக் காண்கிறோம்.

கண்ணகி மிகக் கோபமாகப் பாண்டிநாட்டை விட்டகன்றவள், தெய்வமாக மாறியவள், குளிர்ச்சியான சோலைகளிலே அமைவிடம் தேடிக் கொண்டவள் என்ற நம்பிக்கை மக்களிடையே உண்டு. ஈழத்திலே பிரதானமாக யாழ்குடாநாட்டில், அம்மன் ஆலயங்கள் இயற்கை மரங்கள் அடர்ந்த சோலைகள் நிறைந்த இடங்களிலேதான் அமைந்துள்ளன என்பதைக் காண்கிறோம். இவ்விதம் தென்மராட்சிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதியில் பிரசித்தி பெற்ற மூன்று அம்மன் ஆலயங்கள் உள. பன்றித்தலைச்சி மட்டுவில் அம்மன், சுட்டிபுரம் அம்மன், ஆகியனவே இவை. இவ்வாலயங்களுள் ஒன்றான சுட்டிபுரம் ஆலயம் என்று அழைக்கப்பட்டுவரும் சிட்டிவேரம் அம்மன் ஆலயம் தென்மராட்சிப் பகுதியில் கொடிகாமத்திலிருந்து பருத்தித்துறை செல்லும் வீதியில் வரணி இயற்றாலை, காரம் குறிச்சி, நாவற்காடு ஆகிய மூன்றும் சந்திக்கும் வரணிப் பகுதியில் அமைந்துள்ளது.

கண்ணகை அம்மனின் அருளின் பெருமையை இவ்வூர் மக்கள் மட்டுமன்றி யாழ்பாணத்திலுள்ள ஏனைய மக்களுமே அறிவர். யாழ்ப்பாணம் கண்டி வீதியில் முருகண்டி என்னும் இடத்தில் அமைந்துள்ள முருகண்டிப் பிள்ளையாரின் அருள்பற்றி அறியாதார் இல்லையல்லவா? அதுபோலவே கொடிகாமம் பருததித்துறை வீதியில் அமைந்துள்ள சிட்டிவேரம் அம்மனின் அருளையும் இவ்வீதியால் பிரயாணம் மேற்கொள்வோரும் அறியாமல் இல்லை. தமது பிரயாணத்தை அம்மன் ஆலயத்திலிறங்கி வணங்கிய பின்பே தொடர்வர்.

வானளாவ முட்டும் கோபுரங்கள் இல்லாத ஒரு ஆலயமே இது. ஏனைய ஆலயங்கள் போல் எழுச்சி மிகு கட்டிடங்களையும், அழகிய கோபுரங்களையும் அமைத்து அம்மன் ஆலயம் விளங்க வேண்டும் என்று ஊர்மக்கள் விரும்பினர். ஆனால் இம்முயற்சி எடுக்கும்போதெல்லாம், அம்மனின் அருளினால் தடைகள் ஏற்பட்டன.

“நிலபுலன்கள் எழுதிவைத்தாள் நிறைய உண்டு என்று
அகிலமெல்லாம் போற்றிடுதே அதிசயமென்று
வருமானம் தினவேளைப் பூசையுமாகும்இங்கு
பெருங்கோயில் அமைப்பதற்கு மறுப்பதுமேன்”

என்ற இந்த பாடலில் இவ்வம்மனின் வரலாறும் மகிமையும் அடங்கி இருப்பதைக் காணலாம்.

வளம் மிக வரணியில் வளங்கொளிக்கும் வயல்வெளியில் இயற்கைச் சோலை மத்தியில் எய்ப்பன்றிக் காட்டில் அமர்ந்திருந்து அருளாட்சி செலுத்தும் அம்மனை சுட்டிபுரம் அம்மன் என்றே அழைப்பர். காளி, கொற்றவை என்ற இலக்கியம் கூறும் கண்ணகை அம்மன் வழிபாடு கஜபாகு மன்னனின் விருப்பத்தில் இங்கு வந்து சேர்ந்தது என்பது வாய்வழி மூலம் கிடைத்த கதைகள் மூலமும் வரலாற்றுச் சான்றுகள் மூலமும் அறிய முடிகின்றது.

சிட்டிவேரம் என்பது இக்கோயில் அமைந்திருக்கும் காணியின் பெயர். இக்காணியின் உறுதியிலிருந்து இதனை அறியக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடியதாகவுள்ளது. சுட்டிபுரம் என்பது சிட்டிவேரம் என்பதிலிருந்து மருவியபெயரே. ஓலைச் சுவடிகளில் எழுதப்பட்டிருந்த இக்காணியின் உறுதி இப்பொழுது கோயில் நிர்வாக சபையினரால் மீள எழுதப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகின்றது. எய்ப்பன்றிக் காட்டில் சோலைகள் நிறைந்த குளிர்ச்சி பொருந்திய இடத்தில் கண்ணகை அம்மன் அமர்ந்துள்ளாள் என்பதை இக்கோயிலைப் பற்றிய பாடல்கள் மூலம் அறிகிறோம்.

இக்கோயில் எப்பொழுது கட்டப்பட்டது என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் இல்லை. கஜபாகு மன்னன் காலத்தில் கண்ணகை அம்மன் வழிபாடு கொண்டு வரப்பட்டது என்றமையால் இது ஒரு பழமை வாய்ந்த கோயில் என்றே கூறலாம். போர்த்துக்கேயர் காலம் இந்து சமயத்திற்கு இருள் நிறைந்த காலம் என்பது அறிந்ததே. இவ் அன்னியர் ஆட்சிக்காலத்தில் இவ்வாலயத்தின் மூலஸ்தானத்தில் இருந்த அம்மன் விக்கிரகம் பாதுகாக்கப்பட்டு வைத்திருந்ததாகவும், பின் அதே காணியில் வைத்து ஒரு பிரமுகர் வழிபட்டு வந்ததாகவும், வாய்மொழிக் கதைகள் மூலம் அறிகிறோம். ஆரம்பத்தில் கண்டாக்கல்லால் கட்டப்பட்டிருந்த ஆலயம், தற்பொழுது பொழிகல்லால் கட்டப்பட்டுள்ளதைக் காணலாம். 1935ம் ஆண்டில் புனருத்தாரணம் செய்யப்பட்டுள்ள விபரம் கல்லொன்றில் பொறிக்கப்பட்டுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில் இக்கோயில் புதுப்பிக்கப்பட்டுள்ளதையும் அறிகிறோம்.

இங்கு வைகாசிப் பூரணையன்று பொங்கல் இடம்பெறும். முல்லைத்தீவு வற்றாப்பளை அம்மன் ஆலயத்தில் வைகாசி விசாகத்தன்று பொங்கல் இடம்பெறும். அந்த நாளிலேயே இங்கேயும் இது இடம்பெறும். ஆலய உற்சவமும் ஆரம்பமாகி 13 நாட்கள் மிக விமரிசையாக அலங்காரத்திருவிழாக்கள் இடம்பெறும். பசுக்கள் நிறைந்த சூழல் அல்லவா. திருவிழாக் காலங்களில் மட்டுமன்றி சாதாரண நாட்களிலும் அம்மன் பால் அபிஷேகத்தினால் குளிர்ச்சி அடைவாள். திங்கட்கிழமை வெள்ளிக்கிழமை ஆகிய இரு தினங்களும் மிக விசேடமான தினங்களாகும். உற்சவகாலங்களில் பல்வேறு இடங்களிலிருந்தும் அணி அணியாக அடியார்கள் இவ்வாலயத்தை நாடி வந்து அம்மன் அருள் பெறுவர்.

உற்சவகாலத்தில் மேற்குத்திசையில் எழுந்தருளியிருக்கும் பிள்ளையார் கோயிலுக்குச்சென்று அங்குள்ள குளத்தில் நீராடியபின் திம்புருவில் இளைப்பாறி ஆலயம் திரும்புவாள் கண்ணகை அம்மன். அம்பாளை அலங்கார ஊஞ்சலில் வைத்து ஊஞ்சல் பாட்டுப்பாடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மன் அருள்பெற்று மக்கள் அகம் மகிழ்ந்திருப்பார்கள். உற்சவ காலத்தில் ஊரே புனிதமாக, அம்மனின் அருளாட்சியுர்லு் தெய்வீகத் தன்மை பெற்று விளங்கும்.

“கண்நோய்கள், கடும் நோய்கள் கண்டவர் எல்லாம் - நின்றன்
காலடியில் தான் விழுவார் தீர்த்து வைப்பாயே
தீரா நோய்கள் தீர்த்து வைக்கும் தேவியே தாயே - உன்
திருக்காட்சி காட்டி எம்மை மீட்டிடுவாயே”

என்ற பாடல் சுட்டிவேரம் அம்மனின நோய் தீர்க்கும் மகிமையைக் கூறுகின்றது. தீரா நோய்கள், தீராத துன்பங்கள், இன்னும் பல்வேறு கஷ்டங்களை நீக்க வேண்டும் என்று அம்மாள் சந்நிதியை நாடி வரும் அடியார்கள் பறவைக் காவடி, தூக்குக் காவடி, பாற்காவடி கற்பூரச்சட்டி, எடுத்தல், எனப் பல்வேறு வகைகளில் தம் நேர்த்திகளை நிறைவேற்றுவர்.

ஈழத்தின் அரசியல் நிலைகாரணமாக முன்புபோல உற்சவத்திருவிழாக்களைச் சிறப்புடன் செய்ய முடியவில்லை. இருப்பினும் ஆடம்பரமின்றி, ஆனால் சிறப்பாக உற்சவங்கள் நடைபெற்று வருகின்றன. உற்சவ காலங்களில் அம்மனுக்குரிய பாடல்கள், கோவலன் சரிதப்பாடல்கள் பாடப்படுவதுண்டு. அத்துடன் கூட்டுப்பிரார்த்தனைகளும் இடம்பெறுவதுண்டு.

இசை மேதை காலஞ்சென்ற டாக்டர் சீர்காழி கோவிந்தராசன் அவர்கள் 1976ம் ஆணடில் இவ்வாலயத்தில் இடம்பெற்ற உற்சவ விழாவில் பங்குகொண்டு இவ்வாலயம் பற்றி வீரமணி ஐயர் அவர்கள் இயற்றிய பின்வரும் பாடலப் பாடி தன் இசை மழையினால் அம்மனைக்குளிர வைத்துள்ளார்.

சுட்டிபுரம் வாழும் சிவசுந்தரியே - கண்ணகியே
கட்டி உந்தன் தாழ் பிடித்தேன்
கருணைக் கண்ணால் பாரும் அம்மா (சுட்டிபுரம்)

பட்டிப் பசு இனங்கள் எல்லாம்
பால் அபிஷேகம் செய்யும்
மெட்டி கொஞ்சும் பாத மலர்
மேதினியில் தாராய் அம்மா (சுட்டிபுரம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடிப்பாடிப் பக்தி செய்து
பரவசமானேன் அம்மா
நாடி விழி நீர் சொரிய
நான் உருகி நின்றேன் அம்மா (சுட்டிபுரம்)

தேடி உன்னைச் சரணடைந்தேன்
தேவியே கண்ணகியே
ஏடிவிலங்கும் எழிலிலங்கும்
ஏழிசை தமிழ்இலங்கும் (சுட்டிபுரம்)

இன்று புலம்பெயர்ந்து வாழும் இவ்வூர் மக்களும் தம்குலதெய்வத்தை மறவாது அவளின் அருளை மறவாது, ஆலய பரிபாலனத்திற்கு தமது பங்களிப்பைச் செய்து வருகின்றனர்.

பக்தியுடன் அடியார்கள் புடை சூழ்ந்துமே - நிதம்
பாமாலை பாடிமனம் உருகிடுவார்
சித்தி வேண்டி நோன்புடனே வலமும் வருவார்
சித்திரப் பொற்பாவையைப் போல் பார்த்திருப்பாய் - அம்மா
வேண்டும் வரம் தந்து காத்திடுவாய் அம்மா

என்று சிட்டிவேரம்மனை வேண்டிக் கொள்வோமாக!

**அருள்மிகு நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் இந்துசமயப் பேரவை நடத்திய சமய நிகழ்ச்சிகள்**

## சிவயோக சுவாமிகளின் நற்சிந்தனை முற்றோதல்



நற்சிந்தனை முற்றோதல் ஏழாவது வருடமாக சிவயோகசுவாமிகளின் வருடாந்தக் குருபூசையை முன்னிட்டு 26-03-2005 சனிக்கிழமை காலை 7 மணி தொடக்கம் இரவு 10 மணிவரை நடத்தப்பட்டது. பல சிவனடியார்கள் பக்தி சிரத்தையுடன் கலந்து கொண்டனர்

## நடேசர் அபிசேகம்

மாசி மாதத்தில் நடைபெறும் நடேசர் அபிசேகம், திருவாச முற்றோதலுடன் சிறப்பாக நடத்தப்பட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்

ஆத்மஜோதி நா. முத்தையா

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்."
"தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை."
"அம்மையே அப்பா ஒப்பிலா மணியே."
"பால் நினைந்தூட்டும் தாயினும் சால..........."

மேற்கூறப்பட்ட அடிகள் தாயின் பெருமையை மேம்படுத்துகின்றன. உலகில் கொடிய தந்தை இருக்கலாம். கொடிய தாய் இருந்தாள் என்பதற்குச் சான்று இல்லை. "பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு" என்பது பழமொழி. இதற்கு திருஷ்டாந்தமாக செக்கோசிலவாக்கியாக கதை ஒன்றுள்ளது.

ஒரு தாய், கணவனை இழந்தவள். அவளுக்கு ஒரு மகன். தந்தை முகம் கண்டு அறியாதவன். அவன் தாயின் வயிற்றில் இருக்கும்போதே தந்தை இறந்து விட்டான். தாய் மிக மிகக் கஷ்டப்பட்டு மகனை வளர்த்தாள். அவனும் நன்றாகக் கற்றுத் தேறி உத்தியோகம் ஒன்றில் அமர்ந்தான்.

தான் உயிரோடு இருக்கும் போதே மகனுக்குத் திருமணம் செய்து வைத்துவிட வேண்டும் என்று விரும்பினாள் தாய். தாயைக் கஷ்டப்பட விடாமல் மகனே தனக் கேற்ற மணமகளைத் தேடிக் கொண்டான். மகனுடைய நலத்தை விரும்பிய தாய், மகன் தேடிய மனைவியை மருமகளாக அன்போடு ஏற்றுக் கொண்டாள். மாமியும் மருகியும் மருவி வாழ்தல் அரிது என்பதற்கிணங்க மாமியும் மருகியும் கீரியும் பாம்புமாக மாறினார்கள். இருவருடைய முறைப்பாட்டையும் கேட்டு சலித்து விட்டான் மகன். மகனுடைய தீர்ப்பு மனைவி பக்கமாகவே சார்ந்து நின்றது. மகனுடைய நலத்தையே விரும்பிய தாய் அதனையும் பொறுத்துக் கொண்டாள். மாமியின் பொறுமை மருமகளுக்கு மேலும் கோபத்தைக் கொடுத்தது. மகன் மனைவி தாசனாக மாறினான்.

மனைவியின் சொற்படி தாய்க்கு தனியாக ஒரு அறையைக் கட்டிக் கொடுத்துத் தாயை அதில் வாழ வைத்தான் மகன். தாய் அதனையும் மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டாள். இப்பொழுதும் மருமகளின் ஆவேசம் குறையவில்லை. ஒருநாள் மனைவி கணவனுக்குக் கடுமையான உத்தரவு போட்டு விட்டாள். "நான் உமக்கு இனிமேல் மனைவியாக வாழ வேண்டுமானால் உமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயினுடைய இருதயத்தைத் துடிக்கத் துடிக்க எனது காலடியில் கொண்டு வந்து போட வேண்டும். இக்கொடிய செய்கையைச் செய்யவும் அவன் துணிந்து விட்டான். தாய் அயர்ந்து தூங்கும்போது பார்த்துக் கோடரியுடன் சென்றான். நெஞ்சைப் பிளந்தான். இருதயத்தைக் கையில் ஏந்திக் கொண்டு ஓட்டமாக மனைவியிடம் ஓடினான். ஓடின வேகத்தில் கல் தடுக்கிக் கீழே வீழ்ந்து விட்டான். விழும்போது இருதயத்தைத் தலைக்கு மேலாகப் பிடித்துக் கொண்டு வீழ்ந்தான். இப்போது தாயின் இருதயம் பேசியது. "மகனே கால் கல்லில் நன்றாக அடிபட்டு விட்டதா?" இது தான் தாயின் உள்ளம். தாயின் நெஞ்சைப் பிளந்தது மகனின் செயல். இந்த நாடகத்திற்குச் சூத்திரதாரி அரக்க குணம் படைத்த மருமகள்.

கருவிலே இருக்கும் குழந்தையைத் தாய் பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்து கண்ணை இமை காப்பதுபோல் காக்கிறாள். குழந்தைக்கு நோய் வந்தால், தான் பத்தியம் இருக்கிறாள். இத்தனை பாடெல்லாம் பட்டு மகனை வளர்க்குந்தாய் தன் மகன் சான்றோனாக நல்லோனாக வாழ வேண்டும் என்பதையே விரும்புகிறாள். இதனை வள்ளுவர்,

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்"

என்று கூறுகிறார்.

மிக உயர்ந்த குணங்கள் உள்ள நல்லவன் என்று தன்னுடைய மகனைப் புகழ்ந்து பேசுவது காதில் விழுகிறபோது தாயானவள் அந்த மகனைப் பெற்றெடுத்த காலத்தில் அடைந்த மகிழ்ச்சியைக் காட்டிலும் அதிகமான மகிழ்ச்சியை அடைகிறாள்.

தன் மகன் சான்றோன் என்று பிறர் சொல்லக் கேட்பதில் தாய்க்கு மட்டுந்தானா இன்பம்? தந்தைக்கு இல்லையா? ஏன் இதில் தாயை மட்டும் சொல்லப்பட்டிக்கிறது? தந்தையைச் சொன்னாலே தாயையும் சேருமே. ஏன் பிரித்துச் சொல்லப்பட்டிருக்கிறது என்றால், ஆண்மையின் உணர்ச்சிக்கும் பெண்மையின் உணர்ச்சிக்கும் வேற்றுமை உண்டு என்பதைக் குறிப்பிடவே. தந்தை தன்னுடைய மகன், கல்வியறிவு, கலைத்திறன். சாமர்த்தியம், சம்பாதனை, ஆண்மை ஆற்றல் முதலியவற்றில் சிறப்புடையவனாக இருப்பதை மகிழ்வதைப்போல் வெறும் நல்லவன் என்பதற்காக மட்டும் அவ்வளவு மகிழ்ச்சி அடைந்து விடமாட்டான். ஆனால் தாயானவள் தன் மகனுக்கு மற்றச் சிறப்புகள் இல்லாவிட்டாலும் அவன் வெகுநல்லவன் என்பதில் மட்டுமே மிக்க மகிழ்ச்சி கொள்ளுவாள். அதுவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரார் அவனை வெகு நல்லவன் என்று மெச்சுவதைக் கேட்கிற போதெல்லாம் ஏற்கனவே இயல்பாக உள்ள மகிழ்ச்சி அதிகமாகும். அன்பு, ஆதரவு, ஈரம், இரக்கம் உபகாரம் என்று சொல்லப்படுகிற குணங்கள் பெண்மைக்கே அதிகம் என்பது இயற்கையானதால் மகனுடைய சான்றாண்மையில் தந்தையைக் காட்டிலும் தாயே அதிக இன்பம் அடைகிறாள்.

உலகில் தந்தையை அறியாத பிள்ளை இருக்கிறார்கள். ஆனால் தாயை அறியாத பிள்ளை இருக்கமுடியாது. தந்தை யார் யார் என்பதைத் தாய் தானே காட்டிக் கொடுக்க வேண்டும். குழந்தை பூமியிலே பிறந்து முதன்முதல் பயிலும் மொழி அம்மா என்பதாகும். கன்றுக் குட்டியும் அம்மா என்றே கத்துகிறது. உலகில் உள்ள எல்லா உயிர்களும் துன்பம் வரும்போது அம்மா என்றே கத்துகின்றனவாம். இதனை ஒரு பெரியார் 'அம்மா' என்றால் ஆருயிரைக் கொன்றருந்தி என்று குறிப்பிடுகின்றார்.

கடலில் கிடந்த சிப்பி ஐப்பசி மாதச் சுவாதி நட்சத்திரத்தில் பெய்யும் மழைத்துளியை விரும்பிக் கடலின் மேற்பரப்புக்கு வந்து வாயைத் திறந்த படியே காத்துக் கிடக்கிறது. மழைத்துளி வீழ்ந்ததும் வாயை மூடிய வண்ணம் கடலின் அடிக்குச் சென்று விடுகிறது. பலகாலம் அதைச் சுமந்து வாழ்கிறது. அது முத்து ஆனதும் மக்கள் அதனை எடுக்க சிப்பியைக் கொல்லுகிறார்கள். முத்தை ஈன்ற சந்தோசத்தில் தாய்ச்சிப்பி மரணத் துன்பத்தையே மறந்து விடுகிறது. இதுதான் தாயின் இயல்பு.

வீட்டிற்கு வருகிறான் பிச்சைக்காரன். "அம்மா தாயே பிச்சை போடு" என்று கேட்கிறானே தவிர "ஐயா பிச்சை போடு" என்று கேட்பதில்லை. தாய்மையின் உயர்வு அத்தகையது. மண், பெண், பொன், புகழ் எல்லாவற்றையும் துறந்த பட்டினத்தடிகளால் தாயின் அன்பைத் துறக்க முடியவில்லை.

இறைவனை அன்பு செய்பவர்கள் பலநெறிகளில் அன்புசெய்வதைப் பார்க்கிறோம். இறைவனை எசமானனாகவும் தான் அடிமையாகவும் இருந்து பக்தி செய்வது ஒரு முறை. இறைவனைத் தந்தையாகவும் தன்னை மகனாகவும் பாவனை செய்து பக்தி செய்தல் இன்னோர் முறை. இறைவனைத் தோழனாகக் கொள்ளுதல் பிறிதோர் முறை. இறைவனைத் தலைவனாகவும் தன்னைத் தலைவியாகவும் பாவனை செய்வது சன்மார்க்கம் எனப்படும். (-தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ARUMUGA NAVALAR - FATHER OF "HINDU RENAISSANCE"- (Protector of Hindu culture in Sri Lanka )

Rajagopala Iyer, B.A.

Continued from last issue -

Just as Mahatma Gandhi emerged in India as a political liberator, Arumuga Navalar emerged as Spiritual liberator to the Hindus and the Tamils in Sri Lanka. It was paradoxical that Arumuga Navalar who was considered a 'Guru' by a Catholic Priest, and by the catholic Tamils for his translation of the Bible, helping them to understand Christianity in their mother tongue, became in his later days to be a very famous outstanding 'Guru' for the Hindus. The Missionary techniques which he learnt during his young days with Rev. Father Percival, helped him a great deal in the Hindu Reformation task. With all these activities it was not possible to continue the close connection with the Christian father Rev. Percival. His discourses were too strong to be ignored by the Church authorities, and had adverse affect on Christian Missionary activities. Father Rev. Percival's colleagues became critical of Arumuga Navalar who was therefore compelled to resign from his teaching position at the Methodist Christian school. He was now completely free to carry out his counter mission without any restrain, and set about to lay a strong foundation for the revival of Hindu faith in Sri Lanka.

In addition to the numerous impressive and convincing speeches and writings mentioned above, he adapted the same missionary methods to propagate his mission of safeguarding the Hindu faith. Melodious hymns and Hindu sermons by able Hindu preachers replaced sensual songs and sexual dances temples. He established free Hindu schools where modern education could be imparted in purely Hindu environment, with specially prepared books suitable for the purpose.

He established Printing Presses for the publication of Hindu pamphlets and booklets easily intelligible to the common man. Although Hindu Temples had enormous amount of hidden wealth confined to their coffers, none of the Temple mangers or the Hindu Priests came forward to offer any financial help to Arumuga Navalar in his Hindu educational or reformation activities. In 1848 in his twenty sixth year, he vowed to be a Bramachari ( to be unmarried



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

for ever) and dedicated his life to Hindu revival movement strongly. Following the same methods adapted by the Christian missionaries he considered education to be the best instrument for Hindu religious revival. Working on this line he established the Vannarponnai Saiva Pragasa Vidyasalai in 1849-50, followed by the establishment of a Printing Press at Vannarponnai and Saiva Pragasa Sabai in 1853. Navalar's publications became prominent even among the Christian missionaries. His Saiva Thooshana Pariharam - Rejoinder to the Calumniators of the Saivite Religion " was noticed in the Wesleyan Methodist Report for 1855. The Report contained the following comments :-

**"Navalar- the Saivite Apologist undertakes to prove that every one of the distinctive articles of Saivite belief and observance has its parallel and warrant in the credence and ceremonies set forth in the Christian scriptures. The amount of Scripture brought to the defense is most surprising and the adroitness with which every possible objection is anticipated and repelled belongs only to a first rate mind. The book is doing much mischief."**

As a counter measure for Navalar's Hindu religious activities, the Christian Schools refused permission to Saivite students with their religious symbols on their foreheads. The students with the encouragement given by Navalar left the school in protest. Such protest would not have been possible if not for Navalar. . For the sake of such students Navalar established Saiva English schools where English would be taught with the necessary Hindu background.

He also started agitations against the government for the partial treatment of the Hindus and making use of his oratorical talent for a strong political campaign , he was able to secure the nomination of Sir P. Ramanathan to the Legislative Council, who kept the 'Hindu torch' burning in Sri Lanka after Navaar's demise on the 5th of December 1879. .

The Printing Press which Navalar founded continued successfully even after him and the publications introduced by him were continued by eminent persons trained by him in his ways and methods. His Readers and Catechisms continue to inspire even today those



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

trying to promote the Hindu culture all over the world. The new prose style, with its simplicity and lucidity, which he introduced was an ever lasting contribution to the Tamil language and literature. His monumental editions of the ancient Tamil Classics and his popular writings to educate the common man in his traditional indigenous faith, provide an imperishable monument to his zeal , skill and scholarship.

The school he founded in 1872 was reborn twenty years later as Jaffna Hindu College , Vannarponnai - The greatest Premier Hindu Institution of Sri Lanka which is still producing great intellectual scholars in every profession who are living in many parts of the world.

In the words of Senator A.M.A. Azeez, who was the Principal of the most leading Muslim educational institution in Sri Lanka - Zahira College, Colombo, :-

"History will undoubtedly assign to Navalar the role of a pioneering hero in the transition from the Age of Submergence to the Age of Survival, a significant period in the short chapter on Modern Ceylon, in the long story of the Cultural Relationship between the East and the West."

The natives all over the world could also remember and honor him as one of the saviors of native culture from destruction by the foreign invaders. The Natives of North and south America also owes him a salute, as they had the same experience of the Sri Lankan Tamils in the hands of the Western colonial powers. There were many native leaders who played the same role as Arumuga Navalar in their respective countries."

24ஆம் பக்கத் தொடர்ச்சி

இந்து நாகரிகத் துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி கலைவாணி இராமநாதன் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கினார்கள்.

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, அதிபர் திரு, ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார். சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்கள், ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த சோமசுந்தரபரமாசாரிய சுவாமிகள், செல்வி சி. கெங்காமலர் தேவி ஆகிய பெருமக்கள் ஆசியுரைகள் வழங்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## CATECHISM ON SAIVAISM

### Lesson 2: The Temple - Thirukoyil

11. Which is the holy place on earth where Lord Siva is gracefully present with his consort - Shakthi - Umadeviyar?
    Holy Mount Kailas - known as 'Thiru Kailasmalai'.

12. Where is 'Thiru Kailasamalai' situated?
    It is situated within Himalayan mountains in north India?

13. What are the other places where Lord Siva is present with all his Grace?
    In the Temples referred to as 'Thirukoyilkal'.

14. What is the meaning of 'Thirukoyil'?
    'Thirukoyil' means the holy temple of God . Thirukoyil where God is worshiped in the form of Siva, is known as Sivan Koyil.

15. Name three famous Sivan Temples in Sri Lanka?
    Thirukoneswaram, Thiruketheswaram and Karainagar Sivan koyil.

16. Name three Sivan Temples in Tamil Nadu (South India).
    Chithambaram, Thirubramapuram, Thiruvannamalai.

17. What is the other name for Koyil?
    Koyil is also called 'Alayam'.

18. What is the meaning of Alayam?
    It is the place where the individual Soul (Aanma) blends with God.

19. Who said "It is very good to worship in a Temple?"
    The saintly poet Awvayar.

- to be continued



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. In what form is Lord Siva present in the main inner most chamber of the temple.
He is present in the form of 'Lingam?'

21. What is the meaning of 'Lingam'?
It is the ultimate point where all the souls merge to be one with God. It is the most sacred symbol of God in Saiva religion.

22. How should we go to the Temple?
We should go to the temple after having a bath, wearing a clean and washed dress and applying the holy ash called 'Vibuthi'.

23. What should we do when we go near the temple?
We should worship the temple tower, raising both hands above the head and enter the temple, meditating the God and chanting his names.

24. What should we do after entering the temple?
We should stand behind the flagpole 'Kodithambam' and worship the God.

25. What should we do after worshipping the God, standing behind the flagpole?
We have to go round the inner temple (main chamber), worshipping.

26. How should we go round the main chamber called (Moolasthanam) in which the prime God is present ?
We should walk slowly, with our both hands palms held together above our head, with our thoughts immersed in God reciting his names .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொக்கன் எனும் சொர்க்கம்

## அ.பொ. செல்லையா

தமிழ் என்றால் அது தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களுக்குத்தான் முடியும் என்றொரு நம்பிக்கை வளர்ச்சி பெற்றிருந்த காலம் 20 ஆம் நூற்றாண்டு. காலத்துக்குக் காலம் அந்த மரபு மாற்றப்பட்டு வந்தாலும் அதனுடைய தாக்கத்தை முற்று முழுதாக முறியடிக்க முடியவில்லை.

இந்திய இலங்கை சுதந்திரத்திற்குப் பின்னர் இது முழு அளவில் இருந்தது. அதற்கு முன்னர் ஈழத்தவரும் சரியாசனம் அமர்ந்து தமிழக அறிஞர்களுடன் தமிழை வளர்த்தனர்.

இதில் மிகவும் வெற்றி கண்டவர் மட்டக்களப்பைச் சேர்ந்த சுவாமி விபுலானந்தர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்ப் பேராசிரியராகத் திகழ்ந்தார். அவரது யாழ் நூல் தமிழகப் பேரறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

விபுலானந்தருக்கு முன்னர் ஈழத்துப் பூதந் தேவனார் என்றொருவர் தமிழ்ச் சங்கத்தில் இருந்துள்ளார். சங்க நூல்களில் அவரது பாடலும் உண்டு.

தமிழ் வளர்ப்பதில், தமிழ்க்கலை கலாச்சாரம் காப்பதில், பண்பாடு பேணுவதில் எல்லாம் இரு நாட்டினரும் ஒன்றாகவே உழைத்தனர்.

சுதந்திரம் கிடைத்த பின்னர் இலங்கை சிங்கள ஆதிக்கத்திலும் தமிழகம் வடவர் பிடியிலும் சிக்கின. இலங்கையில் சிங்களமும் தமிழகத்தில் இந்தியும் திணிக்கப்படும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

தமிழகம் ஒருவகைச் சுயாட்சி முறையான ஆட்சியில் இருந்தமையால் தமிழகத்தில் வளர்ந்த துறைகளில் அச்சுக் கலையும் ஒன்றாகும்.

எனவே கல்கி, ஆனந்தவிகடன், குமுதம், மஞ்சரி, என வார இதழ்கள் பெருகின. கலைக்கதிர் போன்ற அறிவியல் மாதயிதழும், சிறுவர்களுக்கான அம்புலி மாமாவும் வந்தன. யாழ்ப்பாணத்தில் இவை செல்வாக்குப் பெற்றன.

கொழும்பு மற்றும் மலையகத்தில் தினத்தந்தி நாளிதளுக்கு நல்ல மரியாதை இருந்தது. இலங்கையில் வீரகேசரி, தினகரன் நாளிதழ்கள் தமிழ் எழுத்தாளர்களை வளர்த்தன.

தினபதி என்று ஒன்று வந்தது. தமிழர் ஆட்சி அதில் பலமாக இருந்தாலும் அது நின்று போய்விட்டது. இப்பொழுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினக்குரல் என்ற பத்திரிகையும் வந்துகொண்டிருக்கிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து ஈழகேசரி, ஈழநாடு என வந்தன, முரசொலி, உதயன், வலம்புரி என்றும் பெருகின. உதயன் மக்களின் ஆசைகளை நிறைவேற்றுகின்றது. இன்னும் வளர வேண்டும்.

இலங்கையில் திரு. வி. க. மறைமலை அடிகள், டாக்டர் மு. வரதராசன், ரா.பி. சேதுப்பிள்ளை, கி. ஆ. பெ. விசுவநாதம், பாரதிதாசன், அகிலன் ஜெயகாந்தன் கா. அப்பாத்துரை இன்னும் பலரின் நூல்கள் விற்பனையில் நல்ல இடத்தைப் பிடித்திருந்தன.

அத்தோடு திராவிட இயக்கத்தவரின் எழுத்துக்களுக்கு நல்ல மரியாதையும் பிடிப்பும் இருந்தது. அதில் இனமானம் இருந்தது. தமிழ் வரலாறு இருந்தது, சமூக சீர்திருத்தம் இருந்தது. தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி, ஏ.வி.பி. ஆசைத்தம்பி, கவிஞர் கண்ணதாசன் போன்றோரின் நூல்கள், பிரதிகள் தேங்காமல் விற்பனையாகின.

இலங்கை எழுத்தாளர்களில் யாரும் திராவிட இயக்கத்தின் தாக்கத்தினைப் பெறாதார் இல்லை எனும் அளவிற்கு அதன் தாக்கம் இருந்தது.

இந்த நேரத்தில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டது. தென்புலோலியூர் கணபதிப்பிள்ளை, கந்த முருகேசனார் போன்றோர் தமிழ் வளர்த்தனர். பண்டிதமணி கணபதிப்பிள்ளையும் தமிழை வளர்ப்பதில் தனக்கென ஒரு பாணியை வைத்திருந்தார். பேராசிரியர்கள் சதாசிவம், வித்தியானந்தன், கைலாசபதி, செல்வநாயகம் போன்றோரின் நூல்கள் வெளியாகின.

இந்த நேரத்தில் யாழ் இலக்கியவட்டம் என்பது இலங்கைத் தமிழர்களின், குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழர்களின் எழுத்துக்களை வளர்க்க உருவாக்கப்பட்டதாகும். இதனை உருவாக்க முன்னின்று உழைத்த கவிஞர் கந்தவனம் போன்ற சிலர் புலம்பெயர்ந்து வாழ்கின்றனர்.

இதனை அடுத்துக் கலாநிதிகள் சபா ஜெயராசா, அ. சண்முகதாஸ், மனோன்மணி சண்முகதாஸ், தேவன் யாழ்ப்பாணம் ஆகியோரின் நூல்கள் தமிழுக்கு ஆரம் சேர்த்தன. கலாநிதிகள் க. குணராசா, காரை சுந்தரம்பிள்ளை, சி. மௌனகுரு, மற்றும் செம்பியன் செல்வன், கவிஞர்கள் இ. முருகையன், இ. சிவானந்தன், புதுவை இரத்தினதுரை, வே. குமாரசாமி போன்றோரின் நூல்களும் வெளிவந்தன.

சமகாலத்தில் எஸ். பொன்னுத்துரையின் (கொழும்பு) எழுத்துக்கள் பிரபலம் பெற்றன. எஸ். பொ. வின் தீ, எழுதில் மறக்கக்கூடியதல்ல! இவர்களின் காலம் சொக்கனின் காலமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொக்கன் என்பது சொக்கலிங்கம் என்ற பெயரின் குறுக்கம். சொக்கனின் எழுத்துக்கள் இலங்கை எழுத்தாளர்களை ஈர்த்தன. “எல்லாம் அந்தச் சொக்கனுக்கே வெளிச்சம்” என்றோர் பழமொழி உண்டு. சொக்கன் என்பது சிவனைக் குறிக்கும்.

பேராசிரியர் வித்தியின் தமிழர் சால்பு போன்றது சொக்கனின் இலக்கிய ஆய்வுகள். தமிழ் இலக்கிய வரலாற்று மாணவர்க்கும் தமிழ் ஆய்வலர்க்கும் மிகுந்த பயனுடைய நூல்கள் அவை.

பல சிறு கதைகள், கவிதைகள், நாடகங்கள் என இலக்கியத்தின் பல்வேறு வடிவங்களில் அவரது படைப்புக்கள் இலங்கின. இதனால் இலங்கை எழுத்தாளர்க்கு ஒரு கௌரவம் ஏற்பட்டது.

செங்கை ஆழியான் எனும் க. குணராசாவின் சிறுகதை, நெடுங்கதை போன்றன யாழ்ப்பாணக் கதைகளை வாங்கிப் படிக்கலாம் என்ற மாற்றத்தை உண்டாக்கின. குணராசாவின் புவியியல் ஒவ்வொரு மாணவர் கரத்திலும் இருந்தது!!

அடியேனின் ‘காலத்தின் விதி (கதை), யார்கொலைகாரன் (நாடகம்), ஏன் வேண்டும் இன்பத் தமிழரசு’ (அரசியல்), இன்னம் சிலவும் இந்தக் காலத்தில் வெளியாகி இருந்தன.

இப்பட்டியலில் பலர் உண்டெனினும் சொக்கன் காலத்தோடு முன்பின்னானவர்கள் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளார்கள்.

தமிழகப் புத்தகங்களை வாங்கக்கூடாது என்பதல்ல, இலங்கைப் புத்தகங்களையும் வாங்க வேண்டும் என்ற உணர்வு வளர்க்கப்பட்டது. அந்த மரம் சாயாதிருக்கப் பக்கபலமாக இருந்த வேர்களில் முக்கியமான வேர்களில் ஒன்று சொக்கன்!

இதற்கு வசதியான தாக்கங்களை உருவாக்கின. நாளிதழ்களும் வாரயிதழ்களும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாரயிதழ் சுதந்திரனும் இதில் சிறந்த பங்கைப் பெற்றிருந்தது.
ஈழகேசரிக் காலத்தில் சொக்கன் என்ற பெயரோடு எழுத்துலகில் பிரவேசித்தார் சொக்கலிங்கம். முற்போக்கு இலக்கிய காலத்திலே அவரது எழுத்துக்கள் முனைப்புப் பெற்றன.

தமிழ்மொழியிலும் நாட்டிலும் மிகுந்த பற்றாளனாக விளங்கினார். அதனால், ஒரு நாட்டுப்பற்றாளனாக மொழிப்பற்றாளனாக இலங்கினார்.

நாடக இலக்கியத்திலும் இவர் வல்லவராகத் திகழ்ந்தார். ‘சிலம்பு பிறந்தது,’ ‘சிங்ககிரிக் காவலன்’ ஆகிய நாடகங்கள் பிரபலம் வாய்ந்தவை.

இவரது இலக்கியப் படைப்புக்களுக்காக 2001 ஆம் ஆண்டு கௌரவ கலாநிதிப் பட்டம் அளிக்கப்பட்டது. அதே நேரம் தமிழீழத்தின் கல்வி மேம்பாட்டுப் பேரவை, கலை பண்பாட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழகம் ஆகியவற்றிற்கு அவர் ஆற்றிய பணிக்கு நாட்டுப் பற்றாளன் எனும் கௌரவமும் அளிக்கப்பட்டது. அவரது இலக்கிய ஆக்கங்கள் பல சாகித்திய மண்டலப் பரிசினையும் பெற்றன.

கல்வி கற்போருக்கு அவர் ஒரு வழிகாட்டி! நூல் நிலையத்தைப் பயன்படுத்திப் பல்வேறு செய்திகளை எப்படிப் பெறலாம் என்பதற்கு அவர் ஓர் உதாரணம். அவருடைய கலந்துரையாடல் நாயன்மார்க்கட்டு ஆலய முன்பாக உள்ள நூல் நிலையத்திலே நடைபெற்றுள்ளது.

சொக்கன் காலத்தில் இலக்கிய மேடைப் பேச்சுகக்ளில் அவருக்கோர் வாய்ப்பிருந்தது. இலக்கியப் பேச்சாளராக, ஆய்வாளராக, விமர்சகராக, கவிஞூராக மட்டுமன்றி விவாதம் மற்றும் வழக்காடு மன்றங்களிலும் வாதப் பிரதிவாதியாக அல்லது வழக்காளியாகவோ எதிரியாகவோ தலைவராகவோ இருந்து தீர்ப்பு வழங்கிய காலங்களுண்டு.

சொக்கன் ஆசிரியராக, அதிபராக, கொத்தணி அதிபராகப் பணிபுரிந்ததோடு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலும் விரிவுரையாளராக விளங்கியுள்ளார். பல்கலைக்கழகமும் இவரைப் பயன்படுத்தி இருக்கலாம்?

சாதாரண ஆசிரியராகப் பணியைத் தொடங்கிய அவர் கலாசாலைப் பயிற்சியை முடித்து பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டதாரியாகி, பின்னர் முதுகலைமாணி ஆக வளர்ந்த சொக்கன் கௌரவ கலாநிதியுமானார்.

'இராவணன் மேலது நீறு' போலத் தனது நெற்றியில் திருநீறணிந்து தன்னை ஒரு சைவனாக மேம்படுத்தினார்!

பிறரது ஆற்றலை மதித்து அவர்களை வளர்த்திடும் பண்பு அவரிடம் நிறைய இருந்தது. எளிமையும் நேர்மையும் கொண்டவர்.

பிறந்தவர் இறப்பது உறுதியானது. சொக்கனும் பிரிந்து விட்டார். சிலர் பிரியலாம். ஆனால் சொக்கன் இன்னும் சிறிது காலம் வாழ்ந்திருக்கலாம். இளம் சமூகத்தினர்க்கு அவரது இலக்கியப்பணி அவசியமாகிறது. சொக்கனின் இடத்தை நிரப்புவது கடினமாகலாம்!

சொக்கனின் இழப்பு தமிழ் உலகிற்குப் பேரிழப்பாகும். அவரைப் பிரிவது கடினமாகும்.

சொக்கன் தமிழரின் சொர்க்கம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# APARTMENT FOR RENT

## PRICE, LOCATION & CONVENIENCE



**CAP REIT**

Canadian Apartment Properties
Real Estate Investment Trust

**4000 LAWRENCE AVE. E**
**TEL: 416-724-4040**
**4010 LAWRENCE AVE. E**
**TEL: 416-724-4041**
**10 TUXEDO COURT**
**TEL: 416-289-7423**
**30 TUXEDO COURT**
**TEL: 416-289-6982**
**370 McCOWAN ROAD**
**TEL: 416-266-7025**
**1050 MARKHAM ROAD**
**TEL: 416-438-3400**
**215 MARKHAM ROAD**
**TEL: 416-267-5223**
**576 SCAR,GOLF CLUB ROAD**
**TEL: 416-431-6994**
**1757 / 1759 VICTORIA PARK AVE**
**TEL: 416-759-9977**

**EXPERIENCE A BETTER QUALITY OF LIFE**

We offer a clean, well - maintained secure home for you and your family

Schools, shopping and public transit at your doorpstep

On site building managers

Large 1,2&3 between with balconies, laundry and parking available



**CAP REIT**

**Visit our website at www.capreit.net**

**NO APPOINTMENT NECESSARY - CALL TODAY**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மஜோதி சுவாமிகளிடம் கேட்டவை

**திருமுறைச் செல்வர் திரு. சிவ. முத்துலிங்கம்**

1. விஞ்ஞானத்தின் உச்சக்கட்டத்தின் முடிவு ஆன்மீகத்தின் ஆரம்பம்.
2. விஞ்ஞானத்தால் மனிதகுலம் அழியும் நிலைமையும் ஏற்படும். ஆனால் ஆன்மீகத்தால் ஆக்கம் மட்டுந்தான் உண்டு.
3. விஞ்ஞானத்தால் மனிதன் அமைதி பெறவே முடியாது. ஆன்மீகத்தால் நிரந்தர அமைதி பெறமுடியும்.
4. விஞ்ஞானம் மனித அறிவிற்குட்பட்டது. ஆன்மீகம் இறைநிலைக்கு உட்பட்டது.
5. எவ்வளவோ விஞ்ஞான முன்னேற்றம் தோன்றியும் விஞ்ஞானத்தால் உலகம் முழுவதும் நிரந்தர அமைதியைத் தோற்றுவிக்க முடியவில்லை. ஆனால் ஆன்மீகத்தால் மட்டுந் தான் நிரந்தர அமைதியை உலகெங்கும் தோற்றுவிக்க முடியும்.
6. விஞ்ஞானம் புலன்களுக்குட்பட்டது. ஆன்மீகம், புலன்கள், மனம் இவற்றுக்கு அப்பாற்பட்டது.
7. விஞ்ஞானிகளுக்குப் புறப்பொருள் சோதனைசாலைகளாகவும் கருவிகளாகவும் அமைகின்றன. ஆனால் ஆத்ம சாதகன் தன்னையே சோதனைச்சாலையாக மாற்றிக் கொள்கிறான்.
8. விஞ்ஞானக் கணிப்புக்கள் காலப்போக்கில் மாறும். இறைவன் நிரந்தரம். ஆன்மீகத்திற்கு மாற்றமே இல்லை.
9. விஞ்ஞானிகள் தங்களால் எதையும் சாதிக்க முடியும் என்று பேசுவார்கள். ஆத்ம சாதகன் பேச்சற்ற மௌனியாக மௌனத்தில் வாழ்வான்.
10. விஞ்ஞானத்தை எளிதில் புரிந்து செயற்பட முடியும். உலகில் பல கோடி மக்களில் சுமார் ஆயிரம்பேர் ஆன்மீகத்தைப் புரிந்து உணர்ந்திருப்பார்களா என்பது சந்தேகம்.
11. விஞ்ஞானி விண்ணையும் மண்ணையும் அறிந்தவன். ஆனால் ஆத்மஞானி தன் முற்பிறப்பும், வரும்பிறப்பும் அறிந்தவன்.
12. விஞ்ஞானி அணுக்களையும் அவை இயங்குவதையும் கண்டு பிடித்தான். ஆத்மஞானி அணுக்களைப் படைத்து இயக்குபவனை கண்டறிந்தான்.
13. ஒரு ஞானியால் விஞ்ஞானியை ஆன்மீகவாதி ஆக்க முடியும். ஆத்மஞானியை சோதிக்க விஞ்ஞானிகளால் முடியவே முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. மகாபாரதத்தில் தருமர் செய்த இராசசூய யாகத்திற்குப் பொருள்தேடி வந்த காலத்தில் அருச்சுனன் ஈழத்திற்கு வந்து இரத்தினங்கள் பெற்றுச் சென்றான் என வியாசபாரதம் கூறுகின்றது.
15. இறை உணர்வு பெற்றவர்கள் இறைவன் தம்முடனேயே எப்பொழுதும் இருப்பதை உணர்கிறார்கள். அதனால் தீய நினைவுகளுக்கு அவர்கள் ஆளாவதில்லை.
16. அவதார புருஷர்களை அறிந்து கொள்வது அரிதானகாரியம். இது எல்லையற்ற அகண்ட வஸ்து எல்லைக்குட்பட்ட கண்டத்துள் அடங்கியிருப்பதற்கு ஒப்பாகும்.
17. தீபம் தன்னைச் சுற்றியுள்ள பொருள்களை விளக்கிக் காட்டுமாயினும் அதனடியில் எப்போதும் இருட்டாகத்தான் இருக்கும். அதேபோல அவதாரபுருடருக்கு வெகு சமீபத்தில் இருப்பவர்கள் அவரைத் தெரிந்து கொள்வதில்லை. தூரத்தில் உள்ளவர்கள் அவதார புருடருடைய அளப்பரிய சக்தியாலும், ஆத்மஜோதியாலும் மனம் கனிந்து இன்புறுகின்றனர்.
18. மனிதனுக்கு உண்மை ஞானத்தையும் பக்தியையும் போதிப்பதற்காக ஈசுவரன் மனித உருவில் அவதாரம் செய்கின்றான்.
19. உலக நாதரின் அவதாரம் நிகழும்போது அவருடைய அருளால் அனைவரும் உயர்நிலை அடைகின்றனர்.
20. பூரண தெய்வீகத்தன்மையை மனிதனுக்கு காண்பிக்கவே பகவானுடைய அவதாரம் நிகழ்கின்றது.
21. உலகத்தில் தருமம் தேய்ந்து பாவம் அதிகரிக்கிறபொழுது இறைவனே அவதாரம் எடுத்து வந்து பாவச் செயல்கைள நீக்கி மக்களுக்கு நல்வழி காட்டுவார். நல்லவர்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் ஆண்டவனுக்கு முக்கியமாக உண்டு.
22. கடவுள் நம்பிக்கை குறைந்து வருகின்றது. அன்பு இல்லை. பக்தி வரண்டு விட்டது. சுயநலம் கூடிவிட்டது. இதனால் உலகம் முழுவதிலுமே பாவச்செயல்கள் மலிந்து விட்டன.
23 ஒருவன் ஆன்மீக வாழ்வில் உயர்வு பெறும் அளவிற்கு தாமே சமரசத்தின் உச்ச நிலையை அடைந்து விடுகிறான்.
24. பல்வேறுபட்ட சமயங்களில் அநுட்டானங்கள் பலவானாலும் வழிகள் பலவானாலும் அடையும் இடம் ஒன்று தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org